பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 12 புதன்கிழமை (25.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :59

## ஜனாதிபதியைச் சந்தித்தார் சொல்ஹெய்ம்

கொழும்பு, ஜன.25

இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து சமாதானப்பேச்சை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும், தற்போது நிலவுகின்ற வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாகவும் கலந்தாலோசித்தார். இச்சந்திப்பு அலரிமாளிகையில் இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியுடன் அவரது செயலாளர் லலித் வீரதுங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட சமாதான ஆலோசகர் ஜயந்ததன பால, வெளிநாட்டு விவகார அமைச்சின் செய லாளர் எச்.எம்.பி.எஸ். பலிகக்கார, அரச சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் ஜோன் குணரட்ன, மற்றும் சமாதான செயலக அதிகாரி சனுக ஜயசேகர ஆகியோர் (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா-சொல்ஹெய்ம் இன்று சந்திப்பு

கிளிநொச்சி,ஜன.25

இலங்கைக்கு வருகைதந்துள்ள நோர்வே அமைச்சரும், சமாதானக்குழுவின் தலைவருமான எரிக்சொல்ஹெய்முக்கும் - விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று கிளிநொச்சியில் இடம்பெறவிருக்கின்றது.

இன்று காலை 9.30 மணிக்கு விசேட ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சிக்கு சொல்ஹெய்ம் வருகைதரவிருக்கிறார். அவர் வந்த கையோடு சந்திப்பு ஆரம்பமாகும்.

எரிக்சொல்ஹெய்முடன் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் இரு தூதரக அதிகாரிகளும் வருகின்றனர். விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், (14ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை 'சுடர் ஒளி' செய்தியாளர் சுகிர்தராஜன் சுட்டுப் படுகொலை!

## கடமைக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்தோர் கைவரிசை



திருகோணமலை,ஜன.25

**'சுடர்ஒளி' திருகோணமலை மாவட்டச் செய்தியாளரான 'எஸ்.எஸ்.ஆர்' எனப்படும் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் (வயது-35) நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இவர் உதயனுக்கும் செய்தியாளராகப் பணியாற்றி வந்தவராவார். பாதுகாப்பு மிகுந்த பிரதேசமொன்றில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் திருகோணமலையில் பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.**

திருகோணமலைத் துறைமுகத்தில் மேற்பார்வையாளராகவும் கடமையாற்றிவந்த சுகிர்தராஜன் கடமைக்குச் செல்வதற்காகச் சென்றுகொண்டிருந்தபோது உவர்மலையிலுள்ள அவரது வீட்டுக்கு அண்மையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

சரியாக நேற்றுக் காலை 6.50 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. துறைமுகத்திற்கு ஊழியர்களை ஏற்றிச்செல்லும் பஸ்ஸில் ஏறுவதற்காக வழமைபோல வீட்டிலிருந்து நடந்துசென்று கொண்டிருந்தபோதே 'எஸ். எஸ். ஆர்' துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தலையிலும், மார்பிலுமாக இரண்டு சூடுகள் விழுந்திருக்கின்றன. சம்பவம் இடம்பெற்ற சிலமணி நேரங்களின் பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த திருகோணமலை நீதிவான் இராமகமலன் விசாரணைகளை மேற் (14ஆம் பக்கம் பார்க்க)

## பூதவுடல் நேற்று கல்முனைக்கு

திருமலை,ஜன.25

திருகோணமலையில் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்ட 'சுடர் ஒளி' செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் பூதவுடல் நேற்றுமாலை அவரது சொந்த ஊரான கல்முனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

கல்முனை அம்மன் கோயில் வீதியிலுள்ள (14ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடலில் மீனவர்கள் மாயம்

யாழ்ப்பாணம்,ஜன.25

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்றொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமற்போயுள்ளார்கள். முல்லைத்தீவு வண்ணாங்குளப்பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு கடற்றொழிலுக்குச் சென்ற தேவ சகாயம் ஜெயக்குமார் (வயது-39) அந்தோனிப் பிள்ளை (14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை அரசியற்றுறை கண்டனம்

கொழும்பு,ஜன.25

"தமிழ் பத்திரிகையாளர் கொலை வரிசையில், நிமலராஜன், நடேசன், சிவராம் ஆகியோருடன் இப்பொழுது எஸ்.சுகிர்தராஜனும் இடம்பெற்றிருக்கிறார். 'சுடர் ஒளி' செய்தியாளர் எஸ்.எஸ்.ஆரின் கொலையும் ஆயுதங்கள் இல்லாமல் உண்மைக்காக போராடும் பத்திரிகையாளருக்கு எதிரான சாவு மணியே." - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்துடன் சேர்ந்துசெயற்படும் இராணுவத் துணைப்படையே இந்தக் கொலையைச் செய்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பட்டப்பகலில் அரச இராணுவத்தினரின் பிரசன்னத்துக்கு மத்தியில் இந்தக் கொலை (14ஆம் பக்கம் பார்க்க)

## வரணியில் மாணவன் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜன.25

வரணிப் பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவர் நேற்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வரணி இயற்றாலையைச் சேர்ந்த கந்தசாமி வைகுந்தன் (வயது-23) என்பரே நேற்றுப் பிற்பகல் சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அவர் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் இடம்பெற்ற வகுப்புக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் பின்தொடர்ந்து வந்த இனம்தெரியாத நபர்கள் வரணி சுட்டிபுரம் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக வைத்து அவரைச் சுட்டுக்கொன்று விட்டுத்தப்பிச்சென்றனர்.

வரணி யாக்கலை பகுதியில் கந்தசாமி வைகுந்தன் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். இவரின் சகோதரர் ஒருவர் மாவீரராக (14ஆம் பக்கம் பார்க்க)

## விளக்குவைத்த குளத்தில் கண்டனப் பேரணி

புளியங்குளம்,ஜன.25

வடக்கு-கிழக்குப் பிரதேசத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளைக் கண்டித்து நேற்று வவுனியா வடக்கு - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் கண்டனப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் ஆரம்பமான இந்தக்கண்டனப் பேரணி விளக்கு வைத்தகுளத்தில் நிறைவடைந்தது.

பெருமளவு மக்கள் கலந்துகொண்ட இந்தப் பேரணியில், தமிழ் மக்களுக்கெதிராக மேற் (14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று இரவு பரவலாகக் குண்டுவெடிப்பு ஓசை

கொழும்பு,ஜன.25

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று இரவு 8.10 மணியளவில் பல்வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

முதலாவது குண்டு நுகேகொட பழைய கஸ்பாவ வீதியிலும், அடுத்தது காசல் வீதியிலும் வெடித்துள்ளது. இதனைத் தொடர்ந்து கடவத்தை, கிரிபத் கொட, கல்கிஸை, ஹெந்தல போன்ற பகுதிகளிலும் வெடித்தது என ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குப்பைகளுக்குள் மறைத்துவைக்கப்பட்ட குண்டுகளே இவ்வாறு வெடித்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து பொலீஸார் தமது தேடுதல் பணிகளைத் துரிதமாக ஆரம்பித்துள்ளார். இதனால் நேற்று இரவு போக்குவரத்துச்சேவைகள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக கொழும்பு - அவிஸாவளை ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டது.

ஏதோவொரு எச்சரிக்கை நடவடிக்கையை நோக்காகக் கொண்டே இந்தத் தொடர் குண்டுவெடிப்புகள் இடம் பெற்றிருக்கலாம் என பொலீஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களும் உஷார்ப் படுத்தப்பட்டு இது (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் சமாதானப் பேச்சுக் குறித்த கருத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

கொழும்பு,ஜன.25

"அமைதிப் பேச்சுக்கு முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ளவேண்டும். இருப்பினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 23ஆம் திகதி 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியில் அமைதிப்பேச்சு விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையே தீர்க்கப்பட வேண்டிய முக்கிய விடயம். இதனுள் முஸ்லிம்களின் தனித்தரப்புக்கு இடமில்லை என்று தெரிவித்திருந்தார். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினார். (14ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு எம்.பிக்கள் இன்று அரசு பக்கம்?

ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தியாளர்களெனக் கருதப்படும் ஆறுபேர் இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவைத் தெரிவித்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இதற்கான இறுதிக் கட்டப் பேச்சு நேற்று நடந்து முடிந்திருக்கிறது. இன்று சுபவேளை ஒன்றில் அவர்கள் அரசுடன் இணைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பில் அதிருப்தி கொண்டிருக்கும் 12 பேர் இவ்வாறு ஆளுங்கட்சிக்கு வரவிருப்பதாகவும், அவர்களில் ஒரு குழுவினரே இவ்வாறு இன்று அரசுடன் இணையவிருப்பதாகவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வருபவர்களுக்கு அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன எனத்தெரிய வருகின்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நேற்றுத் திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவரான 'சுடர்ஒளி - உதயன்' செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் சடலத்தையும் அவரது மனைவி மற்றும் உறவினர் சோகத்தில் கதறி அழுவதையும் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொள்ளப்படுவதையும் படங்களில் காணலாம்.

# 'சுடரொளி' செய்தியாளர் படுகொலை: சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு,ஜன.25

'சுடர்ஒளி' பத்திரிகையின் திருகோணமலைப் பிராந்தியச் செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் படுகொலைக்கு சுதந்திர ஊடக இயக்கம் அதிர்த்தியும் கண்டனமும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுக் காலை மற்றுமோர் ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்குச் சுதந்திர ஊடக இயக்கம் தனது அதிர்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ் நாளிதழான 'சுடர்ஒளி' பத்திரிகையின் திருகோணமலை பிராந்தியச் செய்தியாளராகக் கடமையாற்றும் 'எஸ்.எஸ்.ஆர்' என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் சுகிர்தராஜன், நேற்றுக் காலை 6.50 மணியளவில் கிழக்குத் துறைமுக அதிகார சபைக்கு தமது வீட்டிலிருந்து தொழிலுக்குச் செல்லுகையில் மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். 35 வயதான சுகிர்தராஜன் அவர்களுக்கு மூன்று வயதிலும் இரண்டு வயதிலும் இரு குழந்தைகள் உள்ளனர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் பல அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். கடந்த 12 மாத காலப் பகுதியில் முரண்பாட்டுக் கருத்துக்களுக்கு உடன்படாத நான்கு ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அண்மைக் காலங்களில் தமிழ் பத்திரிகை அலுவலகங்கள் அரசு படைகளினால் பரிசோதனைக்குட்பட்டுவருகின்றன. பல தமிழ் ஊடகவியலாளர்கள் கடந்த இரு மாதங்களில் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

'சுடர்ஒளி' பத்திரிகை அண்மைக்காலங்களில் பல அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளது. 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 'சுடர்ஒளி' பத்திரிகை அலுவலகத்தின் விளம் பர அலுவலகத்திற்கு கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. 2005 ஆம் ஆண்டு 29 ஆம் திகதி அதன் அச்சு அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் பாதுகாப்பு அதிகாரி டேவிட் செல்வரத்தினம் படுகொலை செய்யப்பட்டார். மற்றுமொரு செய்தியாளர் விடுதலைப் புலிகளுக்கு தகவல் வழங்குபவரென அரச ஆதரவு கட்சியினரால் கடந்த 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சுதந்திர ஊடக இயக்கம், இவ்வாறான தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கும் உடனடியாகத் தீர்வினை மேற்கொள்ளுமாறும் கொலையாளிகளுக்கு உரிய தண்டனையையும் பெற்றுக்கொடுக்குமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றது. இவ்வாறான தாக்குதல்கள் சுதந்திர ஊடக செயற்பாட்டிற்கு பாரிய தடையாகுமென்பதையும் சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டுகின்றது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசுவமடுவில் வீதி விபத்து வயோதிபர் பலி !

விசுவமடு-ஒட்டுசுட்டான் வீதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள்-சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். அல்லைப்பிட்டியைச் சொந்த இடமாகவும் கடந்த 10 ஆண்டுகளாக விசுவமடு, 12 ஆம் கட்டையடியில் வசித்துவருபவருமாகிய ஏரம்பு விநாயகமூர்த்தி (வயது-62) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

படுகாயமடைந்த நிலையில் இவர் உடனடியாக தருமபுரம் வைத்தியசாலைக்குச் கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, தீவிர சிகிச்சையின் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக நேற்றுப் பிற்பகல் அம்புலன்ஸ் வாகனத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டார். அப்போது வழியிலேயே அவர் உயிரிழந்தார் என உறவினர் தெரிவித்தனர்.

சடலம் மரண விசாரணை, பிரேத பரிசோதனை என்பவற்றின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-12-15-190)

## போராளிகள் இருவர் வீரச்சாவு

யாழ்ப்பாணம் ஜன.25

கடந்த 6ம் திகதி தம்பலகாமம் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கப்டன் சுமன் (வென்சமின் அன்புராசா சொந்த முகவரி 5ஆம் வட்டாரம் கும்புறுப்பிட்டி, திருகோணமலை. தற்காலிக முகவரி வீரச்சோலை, குச்சவெளி திருகோணமலை). 2ஆம் லெப்டினன்ட் உமைநேசன் (பேரின்பராசா சசிதரன் கங்குவேலி, தெகிவத்த, மூதூர்) ஆகிய இருபோராளிகளுமே வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இதேவேளை சுகயீனம் காரணமாக தமிழீழத் தேசியத் துணைப்படையைச் சேர்ந்த வீரவேங்கை ஜெயந்திநாதன் (முத்தையா - ஜெயந்திநாதன் செம்மாந்தீவு, முருங்கன் மன்னார்) கடந்த 18ஆம் திகதி வீரச்சாவடைந்தார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## தென்னாபிரிக்க அணி வெற்றி

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி. கிண்ணத் தொடரில் இலங்கை -தென்னாபிரிக்க அணிகள் இடையில் நேற்று நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் கடும் போராட்டத்தின் பின்னர் 9 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 263 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடிய போது முத்தையா முரளிதரன் தனது ஒரு ஓவரிலேயே எதிரணித் தலைவர் ஸ்மித்தையும் ஜோன் வன்டரையும் அடுத்தடுத்து ஆட்டமிழக்கச் செய்தார். அந்த இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தியதன் மூலம் ஒரு நாள் ஆட்டங்களில் 400 விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். பின்னர் 264 என்ற ஓட்ட இலக்கை நோக்கி இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது. கடைசி ஓவரில் 10 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலையில் ஒரு ஓட்டத்தை மட்டுமே இலங்கை அணியால் பெறமுடிந்தது. இதனால் இலங்கை அணி 9 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க டிப்பென்னர் தெரிவு செய்யப்பட்டார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற இரு ஆட்டங்களிலும் இலங்கை அணி தென்னாபிரிக்க அணியை 94 ஓட்டங்களாலும் ஆஸ்திரேலிய அணியை 51 ஓட்டங்களாலும் வெற்றி கொண்டிருந்தது.

இந்தத் தொடரில் விளையாடும் மூன்று அணிகளுமே தலா நான்கு ஆட்டங்களில் பங்குபற்றியுள்ளன. ஒவ்வொன்றும் இரு ஆட்டங்களில் வென்றும் இரு ஆட்டங்களில் தோற்றும் உள்ளன. ஆஸ்திரேலியா 10 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் இலங்கை 9 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் தென்னாபிரிக்கா 8 புள்ளிகளுடன் கடைசியிடத்திலும் இருக்கின்றன. நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி எந்த ஒரு புள்ளியையும் பெற வில்லை. இதனால் தொடர்ந்தும் அது இரண்டாம் இடத்திலேயே இருக்கிறது. (ம-6)

## மூத்த சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பெயர்கள் பட்டியலில் வராததால் அதிருப்தி

யாழ்ப்பாணம்,ஜன.25

சுகாதாரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள சுத்திகரிப்புத் தொழிலாளர் பெயர் பட்டியலில் சிரேஷ்ட சுகாதாரத் தொண்டர்கள் உள்வாங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுபவர்களை பிரதேச ஆஸ்பத்திரிகளில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக நியமிப்பது தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தால் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.

இதில் 239 பேரின் பெயர் விவரங்கள் தெரிவுப்பட்டியலாக வெளியிடப்பட்டுள்ளது.

இவற்றில் நீண்டகாலமாக சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றியவர்களில் பலரின் பெயர்கள் உள்வாங்கப்படவில்லை என்றும் - ஆனால், குறுகிய காலத்தில் சுகாதாரத் தொண்டர்களாக இணைந்து சேவையாற்றியவர்கள் பலரது பெயர்கள் தெரிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நீண்டகாலமாக சேவையாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் தமது விசனத்தை தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமது ஆட்சேபனைகளை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கடிதம் மூலம் தெரிவித்து வருகின்றனர். (ஜ-13)

## கிரனேட் மீட்பு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் மனோகரா திரையரங்குச் சந்திக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடைப்பட்ட பகுதியில் [illegible] பணியில் ஈடுபட்டிருந்த [illegible] வெடிக்காத நிலையில் 'கிரனேட்' ஒன்றை மீட்டனர் என்று கூறப்படுகிறது. படையினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் கிரனேட்டை மீட்டு செயலிழக்க வைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7-86)

## வெற்றிதோல்வியற்ற நிலைக்கு இந்திய - பாக்.டெஸ்ட் ஆட்டம்

பைசலாபாத், ஜன.25

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டமும் வெற்றிதோல்வியற்ற நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. நேற்றுப் பிற்பகல் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முன்னதாக, ஐந்து விக்கெட் இழப்புக்கு 441 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி நான்காவது நாளான நேற்றும் தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது. இறுதியில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து இந்திய அணி 603 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுப் பிற்பகலில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணியின் ஆரம்பத்துடுப்பாளராக களமிறங்கிய விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மல் நிதானமாக ஆடி அரைச் சதத்தைப் (59) பூர்த்தி செய்தார். அவருடன் சேர்ந்து ஆடிவரும் யுனிஸ் கானும் (64) அரைச் சதம் பெற்றுள்ளார். ஆட்டத்தின் இறுதி நாள் இன்றாகும். (ம-6)



பத்திரிகையாளர் ந.பரமேஸ்வரன் எழுதி உதயனில் தொடராக வெளிவந்த 'அப்பு ஆச்சி ஆண்ட மண்ணில்' நூல் வெளியீட்டு விழா நேற்று முற்பகல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வள நிலையத்தில் நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் தலைமை உரை நிகழ்த்துவதையும், நூலின் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் நிகழ்த்துவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். 'உதயன்' பிரதம ஆசிரியர் நூலை வெளியிட்டுவைக்க முன்னாள் வலி.வடக்கு பிரதேசசபையின் உபதலைவர் க.சண்முகநாதன் முதற்பிரதியைப் பெறுவதையும் நூலாசிரியர் ந.பரமேஸ்வரன் ஏற்புரையை நிகழ்த்துவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சாத்தியமற்ற ஆலோசனை

பல தத்துவங்கள், கொள்கைகள் மொழிவதற்கு அழகாக இருக்கும். ஆனால், நடைமுறையில் கடைப்பிடிப்பதற்கும் செயற்படுத்து வதற்கும் சாத்தியமற்றவையாக - அசாத்திய மானவையாக - அவை காணப்படும்.

இலங்கை வந்திருந்த அமெரிக்க அரசியல் விவகாரத் துணை அமைச்சர் நிக்கலஸ் பேர்ன்ஸ் இலங்கையில் வைத்து, விடுதலைப் புலிகளை நோக்கி முகிழ்த்த தத்துவ முத்துக் கள் கூட இவ்வாறு நடைமுறைச் சாத்தியமற்ற - பத்தாம் பசலித்தனமான - கருத்துகளாகத்தான் அமைந்திருக் கின்றன.

'மயிலே மயிலே! இறகு போடு' என்றால் அது இறகு போட்டுவிடும். அப்படியிருக்க மயில் இறகுக்காக அதை ஏன் வலிந்து பிடுங்கப் பார்க்கின்றீர்கள்? - என்ற மாதிரி புலிகள் தரப்புக்கு அவர் வழங்கிய ஆலோசனைகள் அமைந் திருக்கின்றன.

மயிலிடம் இறகைக் கேட்டுப்பெற முடியாது. பிடுங்கித் தான் எடுக்கவேண்டும்.

அதே நிலைதான் இலங்கையில் சிங்கங்களிடமும். அந்தப் பட்டறிவு - அனுபவப் பாடம் - ஈழத்தமிழர் தரப்புக்கு நீண்ட காலமாகவே உண்டு.

அவர்களிடம் போய், ''சிங்கங்களிடம் பிடுங்கி எடுக்கா தீர்கள். கேட்டு - வினவி - பெறுங்கள்!'' - என்பது போல தத்துவம் ஓதிச்சென்றிருக்கின்றார் அமெரிக்க அரசியல் விவகாரத் துணை அமைச்சர்.

''உங்கள் அரசியல் அபிலாஷைகளையும் இலக்குகளை யும் அடைவதற்கு வன்முறையை ஒரு வழியாகக் கையா ளும் உங்களின் அநாகரிக நடைமுறைப் போக்கைக் கை விடுங்கள். துப்பாக்கி சுடுமுனைகளின்மூலம் தங்களின் மனக்குறைகளுக்குத் தீர்வுகாணும் எத்தனத்தை நீங்கள் கைவிடும்வரை உங்களுடன் எமது அமெரிக்க அரசு எந்தத் தொடர்பையும் வைத்துக்கொள்ளாது. அதுபோல இந்த உலகத்தில் எந்த நாடும் உங்களுடன் உறவை ஏற்படுத்த மாட்டாது.'' - என்று கூறியிருக்கிறார் அமெரிக்க இணை அமைச்சர்.

''இந்த நாட்டில் இருக்கும் தமிழ் சமுதாயத்துக்கு தனது நியாயமான அபிலாஷைகள் நிறைவு செய்யப்படவில்லை என்ற சட்ட ரீதியான ஆதங்கம் இருப்பதை எம்மால் உணர முடிகின்றது. ஆனால், அவை இலங்கை அரசினால் முறை யாக - சட்ட ரீதியாகக் கையாளப்பட வேண்டியவை.'' - என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கையில் தமிழ் மக்கள் கடந்த ஐந்து தசாப்த கால மாக எதிர்கொண்டிருக்கும் அவல வாழ்வை, அதன் பின்னணி யில், பின்புலத்தில் மறைந்து கிடக்கும் சிங்கள, பௌத்த பேரினவாத சிந்தனைப் போக்கின் இறுகிய, தீவிர மனப் பான்மையையும் புரிந்து கொள்ளாததால் - அல்லது அறிந்து கொள்ளாததால் - இப்படிப் பேசுகின்றார் போலும் அமெரிக்கத் துணை அமைச்சர்.

ஒன்று, இரண்டு ஆண்டுகள் அல்ல, சுமார் இரண்டரை தசாப்த காலம் அஹிம்சை வழியில் - அமைதி முறையில் - சாத்வீக நெறியில் - தமது நியாயமான அரசியல் அபிலா ஷைகளை அடைவதற்கு முயன்று, தோற்றுப் போய், அந்தப் போராட்டங்கள் எல்லாம் 'அரச பயங்கரவாதத்தி னால்' ஆயுத முனையில் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட பாடத்தை படித்த பின்னரே, 'முள்ளை முள்ளால் எடுக்கும்' யுக்திக்கு அமைய, ஆயுத வழி அடக்குமுறையை அதே பாணியில் எதிர்கொள்ளத் தமிழினம் தயாரானது. அந்த முடிவின் - தீர்மானத்தின் - தொடர் பெறுபேறுகளையே உலகம் இன்று இலங்கைத் தீவில் கண்டுகொண்டிருக் கின்றது.

அதைப் புரியாமல் - அல்லது புரிந்தும் புரியாதது போல காட்டிக் கொண்டு - இலங்கை மண்ணில் வந்து நின்று தத்துவம் பிளக்கின்றார் அமெரிக்க இணை அமைச்சர்.

தமிழர்களின் ஒரே விடுதலைப் போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளைப் பார்த்து, பயங்கரவாதச் செயல்களையும்,வன்முறைகளையும் முற்றாகக் கைவிடு மாறு அமெரிக்க அமைச்சர் கோரியிருக்கின்றார்.

*''பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான - தீர்க்கமான - வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழி தழுவி நிகழும் நியாயமான அரசியல் போராட்டங்களும் பயங்கரவாதமாகத் திரிபுபடுத்தப்படுகின்றன. இந்த வகை யில், இனவாத ஒடுக்கு முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதச் சேறு பூசப்படுகின்றது. பயங்கரவாதத்திற்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடி மறைக்கப்படுகின்றது. ஆயினும், அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர் கள் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகின்றது.''* - என்று கடந்த வருடம் தமது மாவீரர் தின உரையில் தலை வர் பிரபாகரன் கூறியிருந்தார்.

அமெரிக்கத் துணை அமைச்சரின் தற்போதைய பேச்சுக் கூட தலைவர் பிரபாகரனின் அந்த விளக்கத்துக்குள் அடங்கும் ஒரு செயற்பாடேயன்றி வேறில்லை.

ஆயுத பலமும், வலுவுமின்றி - அதன் பயன்பாட்டைப் புறமொதுக்கி விட்டு - வன்முறையற்ற வழியில் இலங்கை அரசுடன் பேசி அல்லது போராடி தமது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வுகளை இலங்கைத் தீவின் தமிழர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்ற சாரப்பட - யதார்த்தம் புரியாமல் - பேசியுள்ள அமெரிக்கத் துணை அமைச்சின் உரை, தம்மோடு சேர்ந்து பகற்கனவு காணத் தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பாகவே கருத வேண்டியுள்ளது.



சாவகச்சேரி சந்தைப் பகுதியில் இனம் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த வர்த் தகர் சந்திரகாயன் திவ்வியதர்சனின் சடலத்தை முதல் படத்தில் காணலாம். மற்றும் சந்தைப் பகுதியில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் அடைந்த செல்வி தேவராசா யசோதா என்ற பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 16ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றுவருவதை அடுத்த படத்தில் காணலாம். (படங்கள் : நேசன்)

# கைதானோரை விசாரணை செய்ய விசேட பொலிஸ் குழு யாழ். வந்தது!

குடாநாட்டில் கைதுசெய்யப்படு வோரை விசாரணை செய்வதற்காக கொழும்பில் இருந்து புலனாய்வுப் பொலிஸ் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்படுவோர் படையினரின் புல னாய்வுத் துறையினரால் நீண்ட நாள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதால் சந்தேக நபர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படுவ தில்லை என்றும் இதனால் அரச நீதி, நிர்வாகச் செயற்பாடுகளில் சிக்கல் தோன்றியுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

இதனையடுத்து புலன் விசாரணை களில் தேர்ச்சிபெற்ற பல பொலீஸார் குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளனர்.

இவர்களில் சுமார் 7 பொலீஸார் யாழ். பொலீஸ் நிலையத்தில் கடமை யாற்றுகின்றனர் என்றும் இவர்களுக் கென யாழ். பொலீஸ் நிலையத்தில் தனியான பிரிவு ஒன்றும் திறக்கப்படவுள்ள தாகவும் பொலீஸ் நிலையவட்டாரங் களில் இருந்து தெரியவந்தது.

படையினர் மற்றும் பொலீஸாரால் கைது செய்யப்படுவோரை இவர்களே விசாரணை செய்வர் - என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ-7)

## பல்கலைக்கழகம் அருகே ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம்:

# படைத் தலைமையகத்திடமிருந்து அறிக்கை கோரியது மனித உரிமைகள் ஆணைக்குழு!

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின ரால் நடத்தப்பட்ட அமைதிப் பேரணி யின் போது செய்தி சேகரிப்பதற்குச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் தாக் கப்பட்ட சம்பவம் தொடர்பான முழுமை யான அறிக்கையினை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் பலாலி படைத்தலைமையகத்திடம் கேட்டுள்ளது-

கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக் கழகச் சூழலில் நிலைகொண்டுள்ள படை யினரை வெளியேறக்கோரி மகஜர் ஒன் றினை இலங்கைப் போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிடம் கையளிப்பதற்காக பல்கலைக்கழக சமூகத்தினர் அமைதி ஊர்வலமாகச் சென்றன.

இது தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளர் கள் படையினரால் மிகமோசமாகத் தாக் கப்பட்டிருந்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான பாதிக் கப்பட்ட ஊடகவியலாளர்கள் மனித உரி மைகள் ஆணைக்குழுவின் யாழ். அலு வலகத்தில் முறைப்பாடுகளைச் செய் திருந்தனர்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகளுக் கும் அபிவிருத்திக்குமான சட்ட ஆலோ சகர் றெமீடியஸ் ஆரம்பித்துள்ளார்-

முதற்கட்டமாக யாழ். மாவட்ட இரா ணுவத்தளபதியிடம் இருந்து முழுமையான அறிக்கையினை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் கேட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்- (ஐ-7)

# பலரைப் பீடித்து வரும் 'ரைபஸ்' என்னும் காய்ச்சல்

யாழ்ப்பாணம்,ஜன.25

குடாநாட்டில் அண்மைக்காலமாக 'ரைபஸ்'(Trbhus) எனும் ஒரு விதமான காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண் ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரு கின்றது என்பது யாழ். மருத்துவமனை பதிவேடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர், நவம் பர், டிசெம்பர் ஆகிய மாத காலப் பகுதி களில் மட்டும் 136 பேர் இந்தக் காய்ச் சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற் றுள்ளனர் என்பது தெரியவருகின்றது.

அதனைவிட தற்போது நாளுக்கு நாள் இந்தக் காய்ச்சலுக்குள்ளாவோ ரின் எண்ணிக்கை அதிகரித்து வரு கிறது.

இது தொடர்பாக பிரதி மாகாண சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனி டம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது :-

இந்த வகையான காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரில் அதிகமானோர் பிரதேச வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விலங்குகளில் உள்ள உண்ணிகளா லும், சுற்றுச் சூழல் மாசடைந்து காணப் படுவதாலும் மற்றும் தலையில் அதி களவில் பேன் உள்ளமை போன்றவற் றால் இக் காய்ச்சல் பரவுகின்றது.

இது தொற்று நோயாகவே காணப் படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த வும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றது என்றும் அவர் தெரிவித்தார் (ஐ-13)

## உதயவாக்கு

உண்மையான ஒழுக்கம், நாணயம் வேண்டுமானால் தேவையும், அவசிய மும் குறையவேண்டும். இவை இரண் டும் அதிகமானால் ஒழுக்கக்கேடும், நாண யக்கேடும் வளர்ந்துகொண்டே போகும்.
-ஓர் அறிஞர்.

## நாளை

தை 13
வியாழக்கிழமை
26.01.2006
திதி: துவாதசி
பின்னிரவு: 2.46 வரை
நட்சத்திரம் : கேட்டை
பிற்பகல் : 2.53 வரை
சுபநேரம் : 08.06 - 09.36
[illegible]
[illegible]

# நேற்று கோலாகலமாக நடைபெற்ற ஸ்ரான்லிக் கல்லூரி பவள விழா

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பவள விழாவும், 'கனகஜோதி' மலர்வெளியீடு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன நேற்று செவ் வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கோலாகலமாக இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸூம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். தேசிய கல்வி யியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபா லன், யாழ். பல்கலைக்கழக நிதியாளர் கே.கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றல், இறைவணக் கம், அகவணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையை பாட சாலை ஆசிரியை திருமதி க.தனமூர்த்தி நிகழ்த்தினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து [illegible] விருந்தினர் உரை இடம்பெற் [illegible] தொடர்ந்து கனகஜோதி மலர் வெளி யிட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதற்பிரதியை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பெற்றுக் கொண்டு உரைநிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வெளி யிட்டு வைக்கப்பட்டன.

நூலின் அறிமுகவுரையை யாழ். தேசி யக் கல்வியியற் கல்லூரியின் உபபீடா திபதி நிகழ்த்தினார்.

தொடர்ந்து இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்விலும், 25 வருடங்களாக பாட சாலையில் ஆசிரியப் பணியாற்றிய 14 ஆசிரியர்களையும், கல்விசாரா ஊழி யரையும் கௌரவிக்கும் நிகழ்விலும் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகன தாஸ் கலந்து கொண்டார். அவர் மாண வர்களுக்கான பரிசில்களை வழங்கி னார். ஆசிரியர்களுக்கும் ஊழியயர்க ளும் விருது வழங்கிக் கௌரவித்தனர். இந்நிகழ்வில் மலர் ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தம் மற்றும் மாணவி களான செல்வி தர்சினி ஜெயக்குமார், செல்வி சரண்யா உதயகுமார் ஆகியோ ரும் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

(ஐ-12-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஏகாம்பரம் நாகம்மா



இருபாலையைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் நாகம்மா அவர்கள் 24.01.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரத்தின் அன்பு மனைவியும் புஸ்பராணி, தனலட்சுமி, வசந்தாதேவி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் தாயும் அமரர் தர்மலிங்கம், அமரர் இராஜசிங்கம் மற்றும் மகேந்திரம், சுந்தர்லிங்கம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**சங்கானை.**
(45961)(32-34-15)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சுப்பையா இராசையா



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செட்டியாரின் அன்பு மகன் இராசையா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணி, கமலம்மா, செல்வநாயகி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வரட்ணம், சிவபாக்கியம், இரத்தினம்மா, இரத்தினமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாதலிங்கம், இராஜேஸ்வரி (ஜேர்மனி), ஜெயபத்மராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராஜா (ஜேர்மனி), சிவம் சிவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சிகா, தர்ஷனன், தவேசன், நிஷாந்தினி, நிவேதா (ஜேர்மனி), ஜெனார்த்தனன், தினேஸ், சயந்தன், சபிந்தன், ஜனனி, சதீஸ், சபேஸ், சயந்தா ஆகியோரின் பேரனும் துர்ஷந்தன், துர்ஷந்தினி, ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.
(45967)(32-16-19)

## வட்டு.பொலீஸ் நிலையம் பலப்படுத்தப்படுகிறது

வலி.மேற்கு,ஜன.25

வட்டுக்கோட்டைப் பொலீஸ் நிலையம் பலப்படுத்தப்படுகின்றது.

வட்டுக்கோட்டைச் சந்தியிலுள்ள வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையம் பனை மரங்களினாலும் கொங்கிறீற் கற்களினாலும் காவல் அரண்கள் அமைக்கப்பட்டு பலப்படுத்தப்படுகின்றது. பொலீஸ் நிலையத்தைச் சுற்றி முட்கம்பி வேலியும் அமைக்கப்படுகின்றது.

(ஐ-175)

## பஸ் வண்டிகள் வழிமறிக்கப்பட்டு திடீர்ப் பரிசோதனை

வலி.தென்மேற்கு,ஜன.25

வலி.தென்மேற்கு பகுதியில் பாதுகாப்பு படையினர் வீதியால் செல்லும் பஸ் வண்டிகள், மினிபஸ்கள் ஆகியவற்றை மறித்து திடீர் சோதனை மேற்கொள்கின்றனர்.

பஸ்வண்டிகளில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளை இறக்கி அவர்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் அவர்களின் பிரயாணப் பைகள், கைப்பைகள் ஆகியவற்றை படையினர் திடீரென சோதனை செய்துவருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய், தொட்டி லடி, மானிப்பாய், கட்டுடை ஆகிய இடங்களில் பஸ்வண்டிகள் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்தவர்களின் அடையாள அட்டைகள் பாதுகாப்பு படையினரால் சோதிக்கப்பட்டன. (ஐ-135)

## பறவைகளால் நெற்பயிர்கள் சேதம்

வலி.தென்மேற்கு,ஜன.25

சண்டிலிப்பாய், கட்டுடை, மானிப்பாய் மேற்கு ஆகிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் விளைந்த நெற்கதிர்களை கொக்குகள், கிளிகள், புறாக்கள் போன்ற பறவைகள் கொத்தித் தின்று வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கூட்டம் கூட்டமாக வரும் இப் பறவைகளின் தொல்லை அதிகரித்து வருவதால் விவசாயிகள் தமது வயல்களில் இவற்றை வராமல் கலைத்து காவல் காத்து வருவதை அவதானிக்கமுடிகின்றது. (203-135)

## கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன

வலி.தென்மேற்கு,ஜன.25

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பிரிவில் நீண்டகாலமாக பொதுமக்களுக்கு உபத்திரவம் கொடுத்துவந்த கட்டாக்காலி நாய்கள் கடந்தவாரம் பிடித்து அழிக்கப்பட்டன.

பண்டத்தரிப்பு பட்டின பகுதியிலும், வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை ஆகிய பகுதிகளிலும் கடந்த 16ஆம், 17ஆம் திகதிகளில் 82 கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-135)

# கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளரின் தந்தை

## யோபுப்பிள்ளை சாள்ஸ் செல்வராசா

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம், புங்குடுதீவு.

(45958)(32-15-34)

# 6ஆம் மாத நினைவஞ்சலி



| கனவுகள் அரும்பிட... | நினைவுகள் வெதும்பிட... |
|---|---|
| 28 | 25 |
| - | - |
| 11 | 07 |
| - | - |
| 1980 | 2005 |

*மர்மங்கள் - நூறு!*
*மாதங்கள் - ஆறு!*
*மிடுக்குடன் நின்ற நீ*
*மீளாதது எங்ஙனம்?*

அமரர்

## சிவசுப்பிரமணியம் மயூரன்

(பழைய மாணவன், யா/இந்துக் கல்லூரி, உயர்தரப் பிரிவு 1999)

47, சுந்தரபவனம்,
காங்கேசன்துறைச் சாலை,
கொக்குவில் மேற்கு.

உன்பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, தம்பிமார்.**

(45957)(26-32-34-15)

# முதலாம் ஆண்டு நினைவுமலர்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 05 |
| 12 | 02 |
| 1945 | 2005 |

அமரர்

## வைத்திலிங்கம் அம்பலவாணர்

திதி: ஏகாதசி 25.01.2006

ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
என்றென்றும் உங்கள் நினைவுகள்
எமை விட்டு மாறாது ...! மறையாது...!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்


சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

(45963)

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணின் மடியில் | மக்களின் மனங்களில் |
|---|---|
| 17 | 21 |
| 06 | 01 |
| 1944 | 2006 |



அமரர்

## இளையதம்பி இராதாகிருஷ்ணன்

(பணிப்பாளர், வீதித் தொழில்நுட்பவியல் நிறுவனம், கிளிநொச்சி)

*முகம் மலர இனிமையாய் பார்த்து*
*உளம் மகிழ இன் சொற்கள் பேசி*
*எம்முடன் உறவு கொண்ட அண்ணனே*
*காலை செய்திகள் சுமந்து வந்த*
*கணப்பொழுதில் உங்கள் மரணச்*
*செய்தி கேட்டு அதிர்ந்து போனது*
*எங்கள் இதயங்கள் - என்றும்*
*புன்னகை பூத்த உங்கள் முகம்*
*எங்கள் மனக் கண்களில்*
*அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறது*
*ஆழ்ந்துறங்கும் உங்கள் ஆத்மா*
*சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்*
*"அன்னாரின் நினைவலைகள் சுமந்து*
*துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்"*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**வடக்கு - கிழக்குப் பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,**
**கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர், பணியாளர்,**
**ஒப்பந்தகாரர்கள்.**

(8/47496)(32-34-15)


# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

## Diploma in Video Mixing

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

Free Study Pack & Photos CD

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
*30/01/2006 :- 08.30*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளவாய்க்காலைப் புனரமைக்க மாநகரசபைக்கு 'யுனிசெவ்' உதவி

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட வெள்ள வாய்க்கால் ஒன்றினைப் புனரமைக்கவென 'யுனிசெவ்' நிறுவனம் 15 லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது.

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகிலுள்ள குளத்திலிருந்து மத்தியூஸ் வீதி ஊடாகச் செல்லும் வெள்ளவாய்க்காலினைப் புனரமைப்புச் செய்யவே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியினை 'யுனிசெவ்' நிறுவனம் யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானத்திடம் கையளித்துள்ளது.

இந்த வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் யாவும் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படும் என்று ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

(ஐ-13)

# சங்கானை ஆஸ்பத்திரியை உடன் புனரமைக்க சுகாதாரப் பகுதி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.25

சங்கானை சுற்றயல் கூறு அரசினர் ஆஸ்பத்திரியினை உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி விடுதிகளும், கட்டடங்களும் நீண்டகாலமாகத் திருத்தி அமைக்கப்படாமல் உள்ளன. இவற்றைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆஸ்பத்திரியின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் பி.சுபாசன் சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கோரியிருந்தார்.

இதுதொடர்பாக சுகாதாரப் பணிப்பாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சங்கானை ஆஸ்பத்திரியின் நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்துள்ளேன். அதனை மாகாண சுகாதார அமைச்சிடம் தொடர்புகொண்டு தெரிவித்துள்ளேன்.

உடனடியாக ஆஸ்பத்திரியை புனர்நிர்மாணம் செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பெரும்பாலும் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கிடையில் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதற்கென நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன - என்றும் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-13)

## பெண்ணுக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம்,ஜன.25

தனக்குத் தானே தீ மூட்டி எரிந்ததாகத் தெரிவித்து உடல் பூராகவும் எரிந்த நிலையில் இளம்பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் மந்திகைப் பகுதியைச் சேர்ந்த தெய்வேந்திரம் மதிவதனி (வயது 27) என்பவரே தீப்பற்றி எரிந்து படுகாயமடைந்தவராவார்.

ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-15)

# மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டி கிடைத்தது!

குருநகர்,ஜன.25

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் பாவனைக்கென அம்புலன்ஸ் வண்டி ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வண்டியை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கடந்த திங்கட்கிழமை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் சபைத் தலைவர் வி.வேலுப்பிள்ளையிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் கு.சிவலிங்கம், எஸ்.கனகசபாபதி, பணிப்பாளர் சபை உறுப்பினர்களான எஸ்.தியாகலிங்கம், ஏ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஜே. தில்லையம்பலவாணர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-51)

# தென்மராட்சி சுகாதார அலுவலகம் நிரந்தரக் கட்டடத்திற்கு மாற்றம்

தென்மராட்சி, ஜன.25

தென்மராட்சிப் பிரதேசத்திற்கான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குரிய நிரந்தரக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி மருத்துவமனை வளவில் திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.குமாரவேற்பிள்ளை இக்கட்டடத்தினை வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர், சாவகச்சேரி மருத்துவமனை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ச.பாலகுமார் உட்படப் பலர் கலந்துகொண்டர்.

பிரதேசத்திற்கான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆரம்பித்த காலம் தொடக்கம் தனியார் கட்டடங்களிலும் சாவகச்சேரி மருத்துவமனைக் கட்டடங்களிலும் மாறிமாறி இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

# 'கொல்களம்' இல்லாததால் நல்லூரில் சட்டவிரோதமாக இறைச்சி விற்பனை

யாழ்ப்பாணம், ஜன.25

கொக்குவில் பகுதியில் கொல்களம் ஒன்று இல்லாததால் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் இறைச்சிவெட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவருவதாகப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நல்லூர் பிரதேச செயலருக்கு முறையிட்டிருக்கின்றனர்.

விரைவில் கொக்குவில் பகுதியில் கொல்களம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் - இதன் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் தடுக்கப்படுவதுடன் பசுமாடுகளை இறைச்சிக்காகப் பயன்படுத்துவதைத் தடுக்க முடியும் எனவும் - பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் சட்டவிரோதமாக மாடு வெட்டப்படுவதாகக் கூறி கொக்குவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கொல்களம் அப்பகுதிப் பொதுமக்களால் அடித்து நொறுக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இதேவேளை -

பசுமாடுகளை இறைச்சிக்காகப் பயன்படுத்துவதாக இருந்தால் அவை கருத்தரிப்பிற்கு ஏற்றவை அல்ல என்பது மிருக வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை இறைச்சிக்காகப் பயன்படுத்தமுடியும் என்று நல்லூர் பிரதேச சபை சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

(ஐ-12)

## புதுமைமாதா ஆலய வருடாந்த திருவிழா


குருநகர்,ஜன.25

குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள திருப்பலியைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் தினமும் மாலையில் நடைபெறும். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை மாலை நற்கருணை நாதர் ஆராதனையும் தொடர்ந்து மறுநாள் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (ஐ-51)

# கல்விச்சாலைக் காட்சிகள்




கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைவிழாவின் போது வித்தியாலய மாணவர்கள் ஆங்கிலப் பாடல் இசைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சிச் செய்தியாளர்)



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் '3 ஏ' சித்திபெற்ற மாணவர்களையும் பெற்றோர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவி ஒருவர் கௌரவிக்கப்பட்டு, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (ஐ)



இளைப்பாறிச் செல்லும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பதில் அதிபர் என். குணசீலனுக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நடத்திய சேவை நலன் பாராட்டுவிழாவில் குணசீலன் நன்றி தெரிவித்து உரையாற்றுவதையும் அருகில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.ஸ்ரீபவன், பகுதித் தலைவர் எஸ். இராஜஸ்காந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-173)



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிப் பவளவிழாச் சபையினரால் நடத்தப்பட்ட பவளவிழாப் பிரகடன நிகழ்வின்போது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவரும் வாழ்நாள் பேராசிரியருமாகிய வி.கே.கணேசலிங்கம் உரையாற்றுவதையும் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசு[illegible] [illegible] அதிபர் வ. ஆறுமுகம் மற்றும் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப் [illegible] காணலாம். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் 18 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

நல்லூர் பிரதேச சபையினால் 2006 வரவு செலவுத் திட்டத்தின் கீழ், சபை நிதியில் இருந்து புதிய ஆண்டுக்கான வேலைத்திட்டத்தில் 18 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் கு. தவசோதி தெரிவித்தார்.

இதனடிப்படையில் கல்லிட்டு தாரிடப்படவுள்ள வீதிகளின் விவரம் வருமாறு:-

✱கல்வியங்காடு ஆறுமுகம் வீதி ✱கோண்டாவில் இராஜேஸ்வரி வீதி, ✱கொக்குவில் 2ஆம் குறுக்கு வீதி, ✱கோண்டாவில் குளங்கரை வீதி, ✱திருநெல்வேலி ஆனைவிழுந்தான் வீதி, ✱நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் வீதி, ✱அரியாலை சித்துப்பாத்தி இந்துமயான வீதி, ✱கல்வியங்காடு அருளம்பலம் வீதி, ✱திருநெல்வேலி பணிக்கர் வளவு வீதி, ✱திருநெல்வேலி வளாக வீதி, ✱திருநெல்வேலி பாரதி வீதி, ✱கோண்டாவில் அருணகிரிநாதர் வீதி, ✱கொக்குவில் உயரப்புலம் வீதி, ✱கொக்குவில் பிரம்படி வீதி ✱முதலாம் குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் வீதி ✱திருநெல்வேலி கலாசாலை முதலாம் குறுக்குவீதி, ✱கோண்டாவில் சத்தார் வீதி, ✱கொக்குவில் காளி கோயில் வீதி. (எ-12)

## ஞானச்சுடர் தைமாத இதழ் வெளியீடு

வடமராட்சிஜன25

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப் படும் "ஞானச்சுடர்" ஆத்மீக சஞ்சிகையின் தைமாத இதழ் வெளியீட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம பீடாதிபதி அன்னவாரிதி சிவத்திருஎஸ்.மோகனதாஸ்சுவாமிகள் தலைமையில் நடைபெறும். (204-173)

## சட்டவிரோத மண் அகழ்வு

தென்மராட்சி பிரதேசத்தில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு அதிகரித்துள்ளதாக தெரிவிப் படுகிறது.

மந்துவில், வரணி, நாவற்குழி, கோயிலாக்கண்டி, கச்சாய்போன்ற பகுதிகளிலிருந்து தினமும் நூற்றுக் கணக்கான வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (204-117)

## அந்தியேட்டி அழைப்பு

பூவுலகு 20 . 10 . 1925



விண்ணுலகு 27 . 12 . 2005

### திருமதி பொன்னம்மா சின்னத்துரை

*அன்புடன் எல்லோரையும் வாழ வைத்து*
*தங்கள் வாழ்விற்கு பொருள் அமைத்து*
*ஒளிர்வதற்காக ஒளியேற்றிய குலவிளக்கே!*
*என்றென்றும் நித்தியானந்தப் பேரின்பத்தில்*
*நிலைத்திருக்க இறைஞ்சுகின்றோம்.*

27.12.2005 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் நாளை(26.01.2006) வியாழக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'துரைபொன்வாசம்'
சந்நிதி வீதி, உடுப்பிட்டி.

**குடும்பத்தினர்.**

(45917)(51-16-17)

## தெய்வீக சமாதானக் கூட்டங்கள்

## யாழ். வீரசிங்க மண்டபம்

வாருங்கள் - தெய்வீக சமாதானத்தைப் பெறுங்கள்



*பிரசங்கித்து ஜெபிப்பவர்கள்*

பாஸ்டர்: ஜுலியோ கபாலியோ
சகோதரி: லினா கபாலியோ (கனடா)

காலம்:-

**இன்றும் நாளையும்**

25 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் 5மணி வரை
அனைவருக்குமான கூட்டம்

26 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் 12மணி வரை
பெண்களுக்கான **விசேட கூட்டம்**

26 ஆம் திகதி பிற்பகல் 2மணி தொடக்கம் 4மணி வரை
அனைவருக்குமான கூட்டம்


**வியாதியஸ்தர்கட்கு ஜெபிக்கப்படும்**

*பிரவேசம் இலவசம் யாவரும் வருக*

**தொடர்புகட்கு:-**
**எக்காளத்தொனி சபை, யாழ்ப்பாணம்.**
T.P: 021 2223632

(45291)

## அக்கினியில் ஆகுதியாகி ஆண்டுகள் இரண்டில்...



அமரர்
**சின்னத்துரை ரஜனன்**

திதி : ஏகாதசி 25.01.2006

அகிலத்தில் 30.10.1975
அனலில் 17.01.2004

அக்கினியில் ஆகுதியாகி உருண்டன
ஆண்டுகள் இரண்டு ரஜனன்
இன்னமும் உனை எண்ணி எண்ணி
ஈன்ற நெஞ்சங்களும் - உன்
உடன் பிறப்புகளும்
ஊசலாடுகின்றன தினம் தினம்
என்ன தான் அவசரம் உனக்கு?
ஏன் தான் ஏகினாய் விண்ணுலகுக்கு
ஐயகோ! ஆண்டுகள் கோடி ஆனாலும்
ஒருபோதும் ஆறாது
ஓயாது உந்தன் நினைவுகள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஓயாத நினைவுகளுடன்:**
**பெற்றோர்: திரு.திருமதி லோகேஸ்வரி சின்னத்துரை**
**சகோதரர்கள்: ரமணன் குடும்பம்(கனடா)**
**ரமணி குடும்பம் (பிரான்ஸ்), ரஜனி குடும்பம் (கனடா)**

*லோகஸ்தான், பிரதான வீதி, சுன்னாகம்.*

(C/47481)(52-16-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை
## முன்னோடி வினாப்பத்திரம்

பொது அறிவு நேரம்: 2மணித்தியாலம்

தொகுப்பு:த.தவசேகர், B.Sc., P.G.D.E., P.G.D.P.

**(நேற்றைய உதயனில் வெளியாகிய பொது அறிவு வினாப்பத்திரத்தின் எஞ்சிய பகுதி)**

31. தேசிய முன்னணி அரசு இந்திய கம்பனி ஒன்றிற்கு சில எண்ணெய்க்குதங்களை குத்தகைக்கு வழங்கியுள்ளது. இக்குதங்கள் எங்குள்ளன?
    1) மட்டக்களப்பு 2) திருகோணமலை 3) சவுகஸ்கந்த 4) காலி
32. இலங்கை அரசுக்கும்·விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் முதற் கட்டப்பேச்சு வார்த்தை நடைபெற்ற நாடு எது?
    1) இந்தியா 2) தாய்வான் 3) தாய்லாந்து 4) ஜேர்மன்
33. குவாண்டர்கிராஸ், ரெபேட்முண்டல், அஹமட்டுச்ஸிலெய்ல் ஆகியோர்
    1) அமெரிக்கர் 2) மருத்துவர் 3) நோபல் பரிசுபெற்றோர் 4) இந்தியர்கள்
34. மரபணுத்தொகுதி பற்றி ஆராய்ந்து அதன் வடிவத்தில் 97% இனைக் கண்டுபிடித்து விட்டதாக கூறும் நாடுகள்.
    1) அமெரிக்கா, ரஸ்யா 2) அமெரிக்கா, ஜேர்மன்
    3) அமெரிக்கா, பிரிட்டன் 4) அமெரிக்கா, கனடா
35. 1967இல் இஸ்ரேல் சிரியாவிடம் இருந்து கோலான் மலைக்குன்றுகளைக் கைப்பற்றியது தொடக்கம் இருநாடுகளுக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டது. இதனைத் தீர்ப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி இரு நாட்டு தலைவர்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி ஓரளவுக்கு சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டது. பேச்சுவார்த்தை நடத்திய சிரியா நாட்டின் தலைவர் இறந்துள்ளார். இவர்யார்?
    1) ஹபேஸ் அல்அஸாந் 2) எகுட்பராக் 3) நெந்தன்யாகு 4) ஹாசேயின்
36. கிழக்குத்தீமோர் மக்களின் உரிமைக்காகப் போராடி 1992 - 1998 வரை சிறையிலிருந்து விடுதலை பெற்ற தலைவர் தற்போது அந்நாட்டின் தலைவராயுள்ளார் இவர் யார்?
    1) பிறைப்பார்லோஸின் 2) குஸ்மாவோ 3) ராமோஸ்ஹோத்தா 4) ஹபீபி
37. பசுபிக் சமுத்திரப் பிராந்தியத்தில் திடீர் உஸ்ண அதிகரிப்பை ஏற்படுத்தி சூழலியல் சம்பந்தமான பரபரப்பை உருவாக்கிய ஒரு நிகழ்வு எல்நினோ என்கிறோம். இது தற்போது உலகநாடுகள் பலவற்றைத் தாக்கி வருகிறது. எல்நினோவின் தாக்கத்தில் பெருமளவு பாதிப்படைந்த, அடையும் ஆசிய நாடு யாது?
    1) இலங்கை 2) இந்தியா 3) சிங்கப்பூர் 4) இந்தோனேசியா
38. பின்வரும் கூற்றுக்களில் இலங்கை தொடர்பாக நிர்வாக அதிகாரம் அரசியல் யாப்பு விதிகளின் படி யாரது கைகளில் உண்டு.
    1) பிரதமரிடம் 2) சபாநாயகரிடம்
    3) பொதுநிர்வாக அமைச்சிடம் 4) சனாதிபதியிடம்
39. ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 15 நாடுகளில் 2002ஆம் ஆண்டு தை முதலாம் திகதியில் இருந்து புதிய சர்வதேச நாணய அலகான யூரோ புழக்கத்தில் வந்துள்ளது. ஆனால் அவ்வமைப்பில் உள்ள நாடுகளில் நாடுகள் இந்த நாணயத்தினை இன்னும் ஏற்று புழக்கத்தில் விடவில்லை. அம்மூன்று நாடுகளிலும் சுவீடன், டென்மார்க் என்ற இரண்டு நாடுகளும் அடங்கும் 3வது நாடு பின்வருவனவற்றில் எது?
    1) இத்தாலி 2) ஸ்பெயின் 3) ஐக்கியராச்சியம் 4) ஜேர்மன்
40. 2001ம் ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசினை பின்வருபவர்களில் யார் பெற்றார்?
    1) விஸப் டெஸ்மன் 2) அமார்டியா சென்
    3) மெடிசின் சான் பிரான்சு நிறுவனம் (MSF) 4) ஐக்கிய நாடுகள் சபையும் கொபி அனானும்
41. இந்தோனோசியாவில் தற்போது அமைதிவழிக்குத் திரும்பியுள்ள ஆயுதக்குழு
    1. கமாஸ் 2) அல்குவைடா 3) மாவோ 4) ஆச்சே
42. ஒரு நாள் கிறிக்கட் போட்டிகளில் அதிகளவு விக்கெட்டுக்களை விழுத்தியவர் யாா?
    1) முரளிதரன் 2) சமிந்தாவாஸ் 3) மெக்றாக் 4) வாசிம்அக்றம்
43. 15. 03 .2002 200 ஆண்டை நிறைவு செய்த அரச வெளியீடு
    1) வர்த்தமாணி 2) சிவப்புப்புத்தகம் 3) நீலப்புத்தகம் 4) ஹான்சாட்
44. அமெரிக்காவின் புகழ்பெற்ற விண்வெளி நிலையம்
    1) நாசா 2) பிரன்ஸ்கயானா 3) ஹரிஹரிக்கோட்டா 4) கொலம்பியா
45. இலங்கையில் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாவட்டம்
    1) மொனறாகலை 2) அநுராதபுரம் 3) யாழ்ப்பாணம் 4) திருகோணமலை
46. எயிட்ஸ் தினம் கொண்டாடப்படுவது எத்தினத்தில்
    1) டிசம்பர் 1 2) டிசம்பர் 2 3) டிசம்பர் 10 4) டிசம்பர் 18
47. இந்தியாவில் காந்தி விருது பெற்ற இலங்கையர் யார்?
    1) அமரதேவா 2) ஆரியரட்னா 3) லெஸ்ரர் ஜேம்ம்ஸ்பீரிஸ் 4) மாலினி பொன்சேகா
48. இந்தியா 1998ஆம் ஆண்டு அணுகுண்டு சோதனை நடத்திய இடம்
    1) சாகி 2) பெக்ரான் 3) ராஜஸ்தான் 4) பலகிஸ்த்தான்
49. அன்சா என்ற செய்தி நிறுவனம் எந்த நாட்டில் உள்ளது
    1) இஸ்ரேல் 2) இத்தாலி 3) இந்தியா 4) பிரான்ஸ்
50. கொலம்பிய விண்கலம் வெடித்துச்சிதறிய போது இறந்த இந்தியர் யார்?
    1) அமர்த்தியாசென் 2) கல்பனா சாவ்லா 3) சீவிராமன் 4) வலன்ரினா
51. ஜப்பான் நாட்டில் பிரசித்திபெற்ற கூட்டுறவு ஒழுங்கமைப்பு எது?
52. உலகின் முதலாவது சுதந்திரவர்த்தக வலயம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
53. இலங்கை மின்சார சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
54. மகாபோதிசங்கத்தை அமைத்தவர் யார்?
55. இலங்கை சுதந்திரம் அடைந்த போது மகாதேசாதிபதியாக இருந்தவர் யார்?
56. 1818 ஆண்டு ஏற்பட்ட கண்டி கிளர்ச்சியை அடக்கிய ஆள்பதி யார்?
57. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் A வலயப் பகுதியில் அமைந்துள்ள பிரதேசம் எது?
58. உலகிலும் இலங்கையிலும் சிறந்த இயக்குநராக கருதப்படும் ஒருவர் 2005 இல் 86வது பிறந்தநாளைக் கொண்டாடினார். அவர் யார்?
59. இஸ்ரேல் நாட்டில் சுகவீனமுற்றிருக்கும் தற்போதைய பிரதமர் யார்?
60. சார்க் அமைப்பில் புதிதாக இணைந்த நாடு எது?
61. கொத்மலை நீர்த் தேக்கத் திட்டத்திற்கு உதவி வழங்கும் நாடு எது?
62. இலங்கையின் இலவச பாடநூல் விநியோகம் தொடங்கிய ஆண்டு எது?
63. உலகிலேயே நீண்ட வரிகளில் தேசிய கீதத்தை உடைய நாடு எது?
64. சுதந்திர இலங்கையின் முதலாவது நிதி அமைச்சர் யார்?
65. சமாதானத்துக்காக வெண்புறாவைப் பயன்படுத்திய ஓவியர்.
66. அமெரிக்க இராணுவத் தலைமையகம் எவ்வாறு அழைக்கபப்டும்?
67. உலக சாதனைப்புத்தகம் கின்னஸ் எத்தனையாம் ஆண்டுமுதல் வெளிவருகிறது.
68. சமுர்த்தித் திட்டத்தின் தாய் நாடு எது?
69. கண்டியின் புராதன பெயர் என்ன?
70. ஒரு நாட்டில் பயங்கரவாதம் நிலவுவதற்கான கொள்கை ரீதியிலான காரணங்களைத் தருக?
71. மனித குளோனிங் மூலம் மனிதனை உருவாக்குவதற்கு எதிராக முன்வைக்கத்தக்க வாதங்கள் யாவை?
72. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என அழைக்கப்படுவதன் கருத்து யாது?
73. 17வது அரசியல் திருத்தத்தின் மூலம் எமது நாட்டில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் எவை?
74. இலங்கையில் சில இடங்களில் பாடசாலைகள் மூடப்படுகின்றன இதில் செல்வாக்கு செலுத்தும் இரு பிரதான காரணங்கள் எவை?
75. லொக்கார்பீ வழக்கு விசாரணை எதனுடன் தொடர்புபட்டது.
76. நவகாலனித்துவம் என்றால் என்ன?
77. ஸ்ரோமென்ற் ஒப்பந்தம் என்பது யாது?
78. வீடியோக் கருத்தரங்கம் எனப்படுவது யாது?
79. ஒரே நிலப்பரப்பில் உள்ள சார்க் மாநாடுகள் எவை?
80. இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்பில் இடம்பெறும் 3 பிரதான துறைகள்.
81. புதிய வறுமை என்பது யாது?
82. இலங்கையில் பாடசாலை கல்வியில் உள்ள பிரதான குறைபாடுகள் 2 தருக.
83. 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட காலம் குழந்தைகளுக்கு முக்கியமானது ஏன்?
84. இலங்கையில் உயிர் பல்வகைமை அமைப்பைக்கொண்ட 3 பிரதேசங்களைக் குறிப்பீடுக.
85. புவி உச்சி மாநாடு எவ்விடயங்களுக்காக நடைபெறுகின்றது.

# இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை
## முன்னோடி வினாப்பத்திரம்

கட்டுரையும் சுருக்கமும் நேரம்: 2மணித்தியாலம்

தொகுப்பு: பா.மகாலிங்கசிவம் B.A. (Hons)

**1) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து கட்டுரை வரைக.**

அ) உலகின் முக்கிய பிரச்சினைகள்:- குடித்தொகையில் முதியோர் அதிகரிப்பு , எயிட்ஸ் நோய்
ஆ) சிறுவர் உரிமைகளும் சிறுவர் துஷ்பிரயோகமும்
இ) சேது சமுத்திரத்திட்டத்தின் சாதக பாதகங்கள் (இலங்கையை மையமாகக் கொண்டு)
ஈ) சுனாமி மீள்கட்டுமானப்பணிகளில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் வகிப்பகம்
உ) தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் கவனத்தை ஈர்த்தவர்களான சரச்சந்திரா, லியானோர்டோ டாவின்சி பற்றிய விவரணம்

**1) பின்வரும் பந்தியை மூன்றிலொரு பங்காக சுருக்கி எழுதுக.**

மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே இன்பத்தை அடைதற்குக் கருவியாய் இருப்பது செல்வம். செல்வம் கல்வி, பொருள் என்று இருவகைப்படும்.

பொன், மணி முதலிய பொருட் செல்வத்தினும் கல்விச் செல்வம் சிறந்தது. ஏனெனில். பொருள் பங்காளிகளாற் பகுத்துக்கொள்ளப்படும்; கள்வராலும் வலிய பகைவராலும் கவர்ந்து கொள்ளப்படும்; கோபங்கொண்ட கொடுங்கோல் மன்னரால் எடுத்துக் கொள்ளப்படும்; வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போகப்படும்; வெந்தழலால் வெந்து சாம்பலாய் விடும்; தம்மை அண்டினோர்க்கு அளித்தாற் குறையும். இவற்றாற் பொருள் அழியுந் தன்மையை உடையது என்பதனை அறியலாகும். அன்றியும் அது பெரும்பாலும் தக்காரிடத்து உண்டாகி நிலைபெறாதது; உடலோடு அழிவது மேலும் அதனை ஈட்டல், காத்தல், இழத்தல் என்றிவற்றால் மக்கள் துன்புறுவர். அது பலரையும் பகையாக்கும்.

கல்வியோ எவராலும் கவரப்படமாட்டாது; தீ, வெள்ளம் முதலிய வற்றால் நாசமுறாதுளு பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க வளருமேயன்றிக் குறைபடாது. ஆதலின் இது அழியுந் தன்மை உடையதன்று; மேலும் பெரும்பாலும் தக்காரிடத்தே உண்டாகி நிலைபெறும். ஒருவனது உடலழியினும் அவன் கற்ற கல்வி அழியாமல், அவனுயிரோடு கிடந்து, அவ்வுயிர் சென்றவிடத்துச் சென்று உதவும். இதனை ஈட்டலும் காத்தலும் எளிது; இழத்தலே இல்லை. இது பகையையும் நட்பாக்கும்.

கல்வியானது கற்றற்கு உரிய நூல்களைக் கற்றல், அந்நூல்கள் அறநூல், யானை குதிரை தேர் படைக்கலம் என்னும் இவற்றின் நூல்கள், அறிவியல் நூல், தொழில் நூல் முதலாகப் பலவகைப் படும். ஒவ்வொருவரும் அனைவருக்கும் இன்றியமையாத பொதுக் கல்வியைப் பயின்று, பின்னர் தமக்கு விருப்பமுள்ள சிறப்புக் கல்வியிலே தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாய் இருப்பவை எண்ணும் எழுத்தும். எண் என்பது கணிதம்; எழுத்து என்பது இலக்கணம். இவ்விரண்டும் மக்களுக்கு இருகண்கள் என்று அறிந்தோர் சிறப்பித்துச் சொல்வர். ஏனெனில், இவ்விரண்டினையும் பெற்றவர் ஞானக் கண்ணைப் பெற்றவராதலின், அவர் தாம் இருக்கும் இடத்தில்லாமல் வெவ்வேறு இடத்தில் உள்ள பொருள்களையும், தாம் உள்ள காலத்தில்லாமல் வெவ்வேறு காலத்திலுள்ள பொருள்களையும் காண்பர். இவ்விரண்டினையும் கல்லாதவர் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் உள்ள பொருள்களைக் காணும் ஆற்றலைப் பெற்றிலர். நோய் முதலியவற்றாலே துன்பஞ் செய்யும் ஊனக் கண்ணையே உடைமையின், அவர் கண்ணுடையராகார்; புண்ணுடையரே ஆவர்.

மக்களின் வாழ்நாள் சில. அவர்களின் அறிவும் சிறிதே, அக்குறுகிய ஆயுட்காலத்திற் பிணியோ பல ஆனால் கல்வியோ கரையில்லாதது. ஆதலின் எல்லா நூல்களையும் கற்றல் இயலாது. அன்னப் பறவையிடத்துப் பாலையும் நீரையும் கலந்து வைப்பின், அது நீரைப்பிரித்து நீக்கிப் பாலையே பருகுமாம். அதுபோல நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருளை உணர்த்தும் நூல்களையே கற்றல் வேண்டும்; அவற்றை உணர்த்தாத வற்றைக் கற்றலாகாது.

கற்றற்குரிய நூல்களை நல்லாசிரியரிடத்துச் சென்று கற்க வேண்டும். வறிஞன் ஒருவன் பொருள் பெறவேண்டி எவ்வாறு செல்வனிடம் சென்று தலை வணங்கித் தாழ்ந்து நிற்பானோ, அது போல் நாமும் ஆசிரியர்முன் அன்புடன் தலைவணங்கி வழிபட்டுக் கற்றல் வேண்டும்; அவருக்கு வருந் துன்பங்களைத் துடைத்தும், மிக்க பொருளைக் கொடுத்தும் உதவ வேண்டும். அவ்வாறு கற்றவரே உயர்ந்தோராவார். அவ்வழிபாட்டு நிலைமைக்கு நாணி, செருக்குக்கொண்டு அழியாத கல்வியைப் பெறாதவர் இழிந்தோரே ஆவர்.

**(விடைகள் நாளைய உதயனில்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## V.சோமசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியரும், சமூகத் தொண்டனும்)

இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பல வருடங்களாக உயர்தர வகுப்பு ஆசிரியராகவும், ஆங்கிலம் கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராகவும், சாரணர் அணியின் பொறுப்பாசிரியராகவும், கூடைப்பந்தாட்ட பயிற்றுநராகவும் கல்லூரியின் அபிவிருத்திக்காக கல்லூரி நேரத்துக்கு மேலதிகமாகவும் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்ததன் மூலம் கல்லூரிக்கு பெரும் புகழைத் தேடித் தந்த பெருந்தகையுமாவார்.

இவரது சிறந்த செயற்திறன் காரணமாக கல்லூரியின் சாரணர் அணி அகில இலங்கை ரீதியாக பல விருதுகளைப் பெற்றுள்ளது. கல்லூரியின் கூடைப்பந்தாட்ட அணி வடமாகாணத்தில் அனைத்து கூடைப்பந்தாட்ட அணிகளையும் வெற்றி கொண்ட அணியாக திகழ்ந்ததோடு கல்லூரி அணி வீரர்கள் இலங்கை அணிக்கும் தெரிவாகி விளையாட வைத்த பெருமைக்குரியவராவார்.

மேலும் இவர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் பல பொறுப்புள்ள பதவிகளை வகித்து பாடசாலை அபிவிருத்திக்கு பல பழைய மாணவர்களது உதவிகளைப் பெற்றுக் கொடுத்த பெரியாராவார். இவர் கல்லூரிக்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாகவும், கூடைப்பந்தாட்ட விளையாட்டை அகில இலங்கை மட்டத்துக்கு உயர்த்தியமைக்காகவும், சிறந்த கூடைப்பந்தாட்ட வீரரான திரு. S.தேவராஜேந்திரன் (பிரான்ஸ்) அவர்கள் இவர் ஞாபகார்த்தமாக இலங்கையிலேயே சிறந்ததாகக் கருதக்கூடிய ஓர் கூடைப்பந்தாட்ட மைதானத்தை கல்லூரிக்கு அமைத்துக் கொடுப்பதில் பெரும் பங்கு வகித்ததோடு, இவரது பெயரில் ஒரு நிதி வைப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

இவரது பிரிவு, கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர்களாகிய எம் எல்லோருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாக உள்ளதோடு எம்மை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், குடும்பத்தினர் ஆறுதல் அடையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.**

(சி.47485) (39.26.16.19)

## தீவக வலய பாடசாலைகளுக்கும் இலவச பாடநூல் இல்லை

குருநகர்,ஜன.25

யாழ்.தீவக வலயப் பாடசாலைகளுக்கு இவ்வாண்டுக்குரிய இலவசப் பாடநூல்கள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை என்று பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

இலவசப் பாடநூல்கள் கல்வி வெளியீட்டுப் பிரிவால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு வவுனியா கல்வித்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து இவைகளை எடுத்துவரும் ஒழுங்குகளை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் இதுவரை மேற்கொள்ளவில்லை என்று தெரிய வருகிறது.

இப்பாடநூல்களை அங்கிருந்து எடுத்து வரும் முயற்சியில் வலயக்கல்விப்பணிப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ-51)

## தொழில்நுட்ப கல்லூரியில் நேர்முகப்பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய ஆண்டுக்கான பயிற்சி நெறிகளுக்குரிய நேர்முகப்பரீட்சைகள், தெரிவுப் பரீட்சைகள் என்பன தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான தெரிவுகள் விரைவில் இடம்பெறவுள்ளன என்றும்-

தெரிவு செய்யப்படும் மாணவர்களின் விவரம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் விளம்பரப் பலகைகளில் பார்வைக்கு இடப்படும் எனவும்-

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி உப அதிபர் ம.அலோசியஸ் தெரிவித்தார். (ஐ-12)


## விற்பனைக்கு

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1 அடி நீளம், 4'' அகலக் கல்லின் விலை 26/- ரூபா மட்டும். நேரடியாகப் பார்வையிட்டுப் பெற்றுச் செல்லவும்.

இடம்: VNC

கும்பளாவளை பிள்ளையார் கோயில் அருகில்,

(45944) அளவெட்டி மத்தி, அளவெட்டி. (261619)

இந்திய பொறியியல் துறையில் பட்டம் பெற்று கணனித்துறையில் 2 தசாப்த கால அனுபவம் உள்ளவரின் நேரடிக் கண்காணிப்பில் முற்றுமுழுதாக செய்முறைப் பயிற்சியுடன்

**புதிய விடிவெள்ளியொன்று**

வெகுவிரைவில் எமது தாயக மண்ணில்

விபரங்களுக்கு நாளைய தினசரியைப் பாருங்கள்


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னையின் மடியில்
27 - 03 - 1946

ஆண்டவன் அடியில்
26 - 12 - 2005

## அமரர் தாமு மார்க்கண்டு

(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

*அன்பான பேச்சு அழகான சிரிப்பு*
*துன்பத்தையும் இன்பமாக ஏற்றுக்கொள்ளும் நீ*
*எம்மை எல்லாம் துயரில் ஆழ்த்தி- இறைவனடி*
*சேர்ந்து விட்டாய் உன் நினைவால் வாடுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (25.01.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரங்கால் சந்தி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(சி.47478) (39.26.16.19)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண் மலர்வு
22.07.1941

விண் உதிர்வு
26.12.2005

## திருமதி நல்லம்மா கந்தசாமி

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்த
மங்கையர் திலகமே! அன்புடன் அன்னையே புனித
வாழ்வில் புண்ணியங்கள் பல செய்தீர் மருதங்குளம்
வைரவர் திருவடி பணிந்தீர் இனிய உமது முகம் எம்
நெஞ்சை விட்டகலாது. பாசமுடன் பண்புடனே வாழ்ந்திருந்தீர்
கனிந்த பேச்சும் நேச மொழியும் காதுகளில் கேட்கிறதே
கடிதில் எமைப் பிரிந்து எங்கு சென்றீர் அம்மா!
உடல் தான் மறைந்தது உருவம் மட்டும் மறையவில்லை
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.


*26.12.2005 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாப அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (25.01.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி..
தொ.பே.: 0602 212795
077 6569773

தகவல்:
லோகநாதன் குடும்பத்தினர்.

(45926) (39.26.16.19)

# மரண அறிவித்தல்



## கதிரவேலு அருளம்பலம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை, துணவியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அருளம்பலம் (ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி, லுமும்பா) 22-01-2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காந்தம்மாவின் அன்புக் கணவரும் நாகரத்தினம், மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீசிவகுமார் (C.T.B), கமலராணி (லண்டன்), அருளானந்தம் (முருகன் பேக்கரி), ஸ்ரீஸ்கந்தராசா (ஸ்ரீஸ்ரோஸ் அன் போட்டோ, உதயன் பத்திரிகை முகவர்- துணவி), முருகானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதரன் (லண்டன்), ஜெகதீஸ்வரி, விஜயராணி, திலகேஸ்வரி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனும் தர்சிகா, தயானி, ஸ்ரீஜெனா, ஜனனி, ஜர்சினி, அகிலன், கபிலன், யசிகா, கோபிகன், கார்த்திகன், ஜசிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-01-2006) புதன்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துணவி,
வட்டுக்கோட்டை. (சி/47490)(26-16-19)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்பிய பகுதியில் பயணிகள் ரயில் பள்ளத்தில் வீழ்ந்து 41 பேர் பலி!

மொன்றினிகுறோ, ஜன.25

சேர்பியா நாட்டின் மொன்றினிகுறோ எனும் பிராந்தியத்தில் பயணிகள் ரயில் ஒன்று தடம் புரண்டு கணவாய் ஒன்றிற்குள் விழுந்ததில் குறைந்தது 41 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் 180 இற்கும் அதிகமானோர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

சேர்பியாவில் உள்ள பொட்கோரிகா எனும் நகரில் நடந்த இந்த விபத்தே அந்த நாட்டின் வரலாற்றில் நிகழ்ந்த மிகமோசமான ரயில் விபத்து என்று அந்த நாட்டு அதிகாரிகள் கூறுகின்றனர்.

பொட்கொரிகாவில் இருந்து 10 கிலோ மீற்றர் வடக்கேயுள்ள பியோஸ் எனும் இடதில் நேற்றுமுன்தினம் மாலை இந்த ரயில் தண்டவாளத்தில் இருந்து விலகி கணவாய்க்குள் பாய்ந்தது.

இது தொடர்பாக செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அந்நாட்டின் உள் விவகார அமைச்சர் ஜுசுப்-கலம்பரோவிக், ரயிலின் வேகத் தடுப்பு தொகுதியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளே இந்த விபத்துக்குக் காரணம் என்று தெரிவித்தார்.

சேர்பிய வடக்கு நகரான பிஜிலோ பொலிஜி எனும் இடத்தில் இருந்து துறைமுக நகரான பார் எனும் இடத்திற்கு 300 பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற இந்த ரயில் பாறைகள் நிறைந்த 300 அடி ஆழ கணவாயினுள் வீழ்ந்துள்ளது. காயமடைந்துள்ளவர்களில் 90 பேர் சிறுவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்துச் சம்பவத்தை அடுத்து அந்நாட்டு போக்குவரத்துத்துறை அமைச்சர் அன்றிஜா லொம்பார் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். மூன்று தினங்களை துக்க தினமாக அனுஷ்டிக்க அரசு அழைப்பு விடுத்துள்ளது.

கணவாயினுள் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களை மீட்பதற்காக ஹெலிகள் வட்டமிட்டுத் தேடுதல் நடத்தின. எனினும், அவர்களை அடைவது காலநிலை சீரின்மையால் தாமதமாகி வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவர் செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "நான் நீண்ட தூக்கத்தில் இருந்தேன்,பெரிய ஒரு சத்தம் எனது தூக்கத்தை கலைத்தது; அதன் பின்னர் எனது தலையில் ஏதோ ஒன்று தாக்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது. நான் மயக்கமடைந்துவிட்டேன். தற்போது இந்த படுக்கையில் இருப்பதைக் காண்கின்றேன்." எனத் தனது அனுபவத்தை விபரித்தார். சேர்பிய மற்றும் மொான்றின்குரோ பகுதிகளில் ரயில் பாதை வலையமைப்பு மிக நீண்ட காலத்துக்கு முன் நிர்மாணிக்கப்பட்டவை. செலவு குறைந்தவை என்பதால் அங்குள்ள ஏராளமான மக்கள் ரயில் சேவையையே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். (ஐ)


## சர்வாதிகாரிகளின் பட்டியலில் முஷாரப்பின் பெயரும் சேர்ப்பு!

நியூயோர்க்,ஜன.25

உலகின் மிக மோசமான சர்வாதிகாரிகளின் பட்டியலில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் பெயர் உள்ளது. அமெரிக்க சஞ்சிகை ஒன்று இந்தப் பட் டியலை ஆண்டு தோறும் தயாரிக்கின்றது. பிற பத்திரிகைகளுடன் சேர்த்து இதை விநியோகிக்கின்றது.

இந்தப் பட்டியலில் 17 ஆவது இடத்தில் இருக்கிறார் முஷாரப். முன்பு 7ஆவது இடத்தில் இருந்தார்.

சூடானின் உமல் அல்-பஷீர், வட கொரியாவின் கிம் ஜோங் - இல், மியான்மரின் தாஷி, சிம்பாப்வேயின் ராபர்ட் முகாபே, உஸ்பெகிஸ்தானின் இஸ்லாம் கிரமோவ், சீனாவின் ஹுஜிந்தாவோ ஆகியோர் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களில் அடங்குவர். (ஐ)



பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிக் கிராமம் ஒன்றில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களுக்காக பாகிஸ்தானிய எதிர்க் கட்சியினர் பிரார்த்தனை செய்கின்ற காட்சி

## ஆப்கான் - பாக். எல்லைப் பகுதியில் அல்கெய்டாவுக்கு ஆதரவு அதிகரிப்பு

இஸ்லாமாபாத்,ஜன.25

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் ஒரு கிராமத்தை அமெரிக்க ராணுவம் கடந்த 13ஆம் திகதி குண்டு வீசி கடுமையாக சேதப்படுத்தியிருந்தது. இதையடுத்து அல் கெய்டா தீவிரவாதிகளுக்கு ஆதரவு அதிகரித்துள்ளது.

அமெரிக்க தாக்குதல் நடந்த கிராமத்தின் பெயர் டமோலா. தாக்குதல் நடந்தபோது அங்கு தீவிரவாதிகள் யாருமே இல்லை. ஆனால், அருகில் இருந்த நகரில் பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆயிரக் கணக்கானோரை அங்கு காணமுடிந்தது. பின்லேடனைப் பாராட்டி கோஷங்கள் எழுப்பப்பட்டன. பாகிஸ்தான் ராணுவத்தினர் எவரையும் அப்பகுதியில் எங்குமே பார்க்க முடியவில்லை.

முன்பு கூட இதேபோல ஓர் ஆர்ப்பாட்டம் நடந்தது. அமெரிக்காவின் தாக்குதல், பின்லேடனுக்கு வலதுகரமாக இருக்கும் அல்- ஜவாரியை குறி வைத்திருந்தது. ஆனால், அது தப்பியது. (ஐ)

## குடியரசுத் தினவிழாவை சீர்குலைக்க தீவிரவாதிகள் டில்லிக்கு ஊடுருவல்?

### பொலீஸார் வலை விரிப்பு! எங்கும் சோதனை

புதுடில்லி.ஜன 25

இந்திய குடியரசு தினவிழா நாளை நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது.

டில்லியில் அன்று பிரமாண்ட கண்கவர் அணிவகுப்பு நடைபெறும். இந்த விழாவை சீர்குலைக்க பாகிஸ்தான் ஆதரவு தற்கொலை தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதை உளவுத் துறை கண்டுபிடித்துள்ளது.

டில்லியில் ஒரே சமயத்தில் தொடர் குண்டு வெடிப்புக்களை நிகழ்த்த வேண்டும் என்ற சதித்திட்டத்துடன் லஷ்கர்-இ-தொய்பா, ஹிஸ்புல் முஜாதீன் தீவிரவாதிகள் ஒருங்கிணைந்து ஊடுருவி இருக்கின்றனர். அவர்கள் வயர்லசில் பேசியதை இடைமறித்துக் கேட்ட உளவுத்துறையினர், டில்லியில் தீவிரவாதிகள் எங்கெங்கு தங்கி இருக்கின்றனர் என்ற விவரங்களைத் தனியாகப் பட்டியலிட்டு தொகுத்து இருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் டில்லியில் பதுங்கி உள்ள தீவிரவாதிகளை பிடிக்க இரவு-பகலாக தேடுதல் வேட்டை நடந்து வருகின்றது.

உளவுத்துறை கொடுத்துள்ள தகவல்படி லக்ஷயர்-இ-தொய்பா இயக்கத்தை சேர்ந்த 7 தற்கொலை தீவிரவாதிகள் கடந்த ஆண்டே டில்லிக்கு வந்துவிட்டனர். அவர்கள் நஜப்கர் பகுதியில் பதுங்கி உள்ளதாக உஷார்ப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நஜப்கர் பகுதிகளில் பொலீஸார் மாறுவேடங்களில் கண்காணித்து வருகின்றனர்.

நஜப்கரில் பதுங்கி இருக்கும் 7 பாகிஸ்தான் தீவிரவாதிகளும் எதையும் செய்யத் தயங்காதவர்கள். அதிநவீன பயிற்சி பெற்றவர்கள். இவர்களுடன் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த மேலும் 4 தீவிரவாதிகள் சேரத் திட்டமிட்டுள்ளனர்.

இவர்கள் நாசவேலை செய்யும் முன்பே மடக்கிப் பிடித்துவிட பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். அதற்கு இதுவரை வெற்றி கிடைக்கவில்லை.

இதற்கிடையில் லக்ஷர்-இ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த 8 முதல்நிலை தற்கொலை தீவிரவாதிகள் காஷ்மீரில் இருந்து டில்லிக்குள் ஊடுருவி இருப்பதனை உளவுத்துறையின் மற்றோரு பிரிவு கண்டுபிடித்துள்ளது. இந்த தீவிரவாதிகள் வி.ஐ.பிக்களின் வீடுகள், அக்பர் வீதியில் உள்ள மந்திரிகள் வீடுகளுக்குள் நுழைந்து நாசவேலைக்கு திட்டமிட்டுள்ளனர். (ஐ)

உலக அரங்கில்

## ஈராக் விவகாரங்களில் ஈரான் தலையீடு

அம்மான்(ஜோர்டான்),ஜன.25

ஈராக் விவகாரங்களில் ஈரான் தலையிடுவதற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார் ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன்.

ஈராக் தலைநகர் பாக்தாதில் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள சதாம், இதை தமது வழக்கறிஞரிடம் கூறியதாக பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## கேரள இளைஞனின் கண் பறிக்கப்படமாட்டாது இந்தியாவின் கோரிக்கையை ஏற்றது சவுதியரேபியா

புதுடில்லி,ஜன.25

சவூதி அரேபியாவின் ஷரியத் சட்டப்படி, கேரள இளைஞர் நௌஷாத்தின் ஒரு கண்ணைத் தோண்டி எடுத்துவிட வேண்டும் என்று அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனினும், அவரது மனைவி வேண்டுகோள் விடுத்ததை அடுத்து, நௌஷாத்தின் கண் தோண்டி எடுக்கப்படமாட்டாது என்று சவூதி அரேபிய அதிகாரிகள் இந்திய அரசுக்கு உறுதியளித்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளாகக் கண்ணீருடன் போராடிவந்த நௌஷாத்தின் மனைவியும் இரு குழந்தைகளும் இதைக் கேட்டு நிம்மதி அடைந்துள்ளனர்.

கேரளத்தின் கொல்லம் மாவட்டம், அஞ்சல் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் அப்துல் லத்தீப் நௌஷாத் (வயது 35), சவூதி அரேபியாவின் டமாம் நகரில் ஒரு பெட்ரோல் நிலையத்தில் பணியாற்றிவந்தார். 2003ஆம் ஆண்டு சவூதியைச் சேர்ந்த நயீப் அல்- உதய்பி என்பவருடன் நிகழந்த தகராறில், நயீபின் கண் பாதிக்கப்பட்டு, பின்னர் பார்வை இழப்பு ஏற்பட்டுவிட்டது. அதையடுத்து சவூதியின் ஷரியத் நீதிமன்றம், 'கண்ணுக்குக் கண்' என்ற ஷரியத் சட்டப்படி , நௌஷாத்தின் ஒரு கண்ணைத் தோண்டி எடுக்க வேண்டும் என்று தண்டனை விதித்தது.

கண்ணைத் தோண்டி எடுப்பதற்கு நௌஷாத் ஒப்புக்கொள்ளவில்லையெனில், வாழ்நாள் முழுவதும் அவர் சிறையில் இருக்க வேண்டும் என்பது சட்டமாகும். எனவே, கடந்த 3 ஆண்டுகளாக சவூதி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் நௌஷாத்.

பாதிக்கப்பட்ட நயீப், அக் குற்றத்தை மன்னித்துவிட்டால் நௌஷாத்தை நீதிமன்றம் விடுதலை செய்யமுடியும். ஆனால், அவர் மன்னிக்க மறுத்துவிட்டார்.

இந்நிலையில் தன் கணவரின் துயர நிலையை பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார் நௌஷாத்தின் மனைவி சுஹைல். அவரது மூத்த மகன் நசீபுக்கு வயது 5. அவன், 'அப்பா எப்போது வருவார்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறான். அடுத்த மகள் அஸ்னாவுக்கு இரண்டரை வயதுதான் ஆகிறது. அவள் தன் அப்பாவைப் பார்த்ததுகூட இல்லை. அவர்களது துயரநிலையை அறிந்த மத்திய அரசு, நௌஷாத்தை அத் தண்டனையிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு சவூதி அரேபியாவுக்கான இந்தியத் தூதருக்கு உத்தரவிட்டது.

இந்த ஆண்டு குடியரசு தின விழா அணிவகுப்பின்போது, இந்திய அரசின் சிறப்பு விருந்தினராக சவூதி அரேபிய மன்னர் கலந்து கொள்ள இருக்கிறார். எனவே, அவரை நேரில் சந்தித்து, தன் கணவரைக் காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கும் நோக்கத்தில், கேரளத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை டில்லிக்கு வந்தார் சுஹைல். கேரள இந்திய கம்யூனிஸ்ட் எம்.பியான செங்கரை சுரேந்திரன் மூலம் வெளியுறவுத் துறை இணை அமைச்சர் இ. அகமதை திங்கட்கிழமை சந்தித்தார்.

இதற்கிடையே சவூதி அரேபிய அதிகா[illegible]ளைத் தொடர்பு கொண்டார் அந் நாட்டுக்கான இந்தியத் தூதர். அவர்கள், "நௌஷாத்தின் கண்ணைத் தோண்டி எடுக்கும் தண்டனை நிறைவேற்றப்படமாட்டாது: எனினும், அதற்கான ஒரு சில நடைமுறைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது" என்று தூதரிடம் உறுதியளித்தனர்.

அதேநேரத்தில் நௌஷாத்தின் மனைவி விடுத்த கோரிக்கை குறித்த சவூதி செய்தித்தாளில் படித்த, கண்பார்வையை இழந்த நயீப், குற்றம் செய்த நௌஷாத்தை மன்னிப்பதாக அறிவித்துள்ளார்.

தன்னை திங்கட்கிழமை சந்தித் சுஹைலிடம், நௌஷாத்தின் கண் தோண்டி எடுக்கப்படமாட்டாது என்று சவூதி அரேபிய அதிகாரிகள் அளித்துள்ள உறுதிமொழியைத் தெரிவித்தார் அமைச்சர் இ. அகமது.

கடந்த 3 ஆண்டுகளாகக் கணவரின் விடுதலைக்காக கண்ணீருடன் போராடிவந்த சுஹைல் அதைக் கேட்டு நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைத்தொகுதி வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஜன.25

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த 107 மீனவர்களுக்கு வலைத்தொகுதி வழங்கும் வைபவம் நாளை முற்பகல் 10.30 மணியளவில் 'கியூடெக்' நிறுவன இயக்குநர் கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-190)


### கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்

**அமரர் குமாரவேலு கதிரவேலு**

அவர்கள் 2006.01.21 இல் இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயருற்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்.

(45976)(42-19-16)



### மரண அறிவித்தல்



**நாகமுத்து நாகலிங்கம்**
(Foreman)

யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நாகலிங்கம் (போமன்: சுதந்திரன், வீரகேசரி, சைவப்பிரகாச அச்சகம்) அவர்கள் நேற்று (24.01.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செந்திமலர் அவர்களின் அன்புக் கணவரும் செல்வமலர் (ஜேர்மனி), லிங்கமலர், தியாகலிங்கம் (கனடா), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவீந்திரன் (ஜேர்மனி), காராளசிங்கம் (நல்லூர் - ப.நோ.கூ.சங்கம்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுப்பிரமணியம், இரத்தினசிங்கம், இராஜசிங்கம் (K.R) ஆகியோரின் அன்புச் சகோதர னும் காலஞ்சென்ற சீதாலட்சுமி மற்றும் அன்னலட்சுமி, தவயோக பூரணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரஜீவன், பிரதீபன், கிட்டேந்திரன், மந்தாகினி (யா/வேம்படி மகளிர் கல்லூரி - 8ஆம் வகுப்பு), லவாகர் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி - 6ஆம் வகுப்பு), கம்சாயினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை - 5ஆம் வகுப்பு), கபிலன், கஸ்தூரி, அஜித் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

406, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:222 3500
222 5030

தகவல்:
சுப்பிரமணியம், இரத்தினசிங்கம் } சகோதரர்
ந.காராளசிங்கம் (குட்டி- மருமகன்)
(நல்லூர் -ப.நோ.கூ.சங்கம், கிளை மேற்பார்வையாளர்).

(45968)(21.19.16.42)



### ஜயோதர

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 6476737 முதல் 6487265 வரை. சீட்டிழுப்பு இல. 205 திகதி 23-01-2006

**வெற்றி எண்கள்**

6 4 8 9 7 2 சுப்பர் எண் 11

ஜக்பொட் பரிசு ரூ. 16,002,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 16,002,500/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/= | 500,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 87 | 5,000/= | 435,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 927 | 500/= | 463,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9212 | 50/= | 460,600/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 91297 | 10/= | 912,970/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 92 | 1,000/= | 92,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 922 | 100/= | 92,200/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9126 | 20/= | 182,520/= |
| | | மொத்தம் | ரூ. 4,183,790/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,786,390/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 6480405-2-51 |
| பொலன்னறுவ | 6481173-0-80 |
| புத்தளம் | 6477755-1-79 |
| பதுளை | 6485609-0-59 |
| களுத்தறை | 6477035-3-88 |
| மட்டக்களப்பு | 6485374-3-06 |
| மாத்தறை | 6478322-2-27 |
| கம்பஹா | 6483049-2-08 |

**இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்**
**ரூ. 16,258,650/-**

தொடர் இல. 7399677 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜனவரி 26 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## தோப்புக்காடு கிராமத்தில் பொருள்கள் சூறை

வலி.மேற்கு, ஜன. 25

காரைநகர், தோப்புக்காடு கிராமத்தில் இருந்து பெறுமதியான மரங்களும் வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள், கூரை சீற்றுகள் போன்றனவும் களவாடப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கடற்படையினரின் கெடுபிடிகளினால் இக்கிராமத்தில் இருந்து சகல குடும்பங்களும் இடம் பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்குச் சென்றுள்ளன. இதனைத் தொடர்ந்து இக்கிராமத்திலுள்ள வேப்பமரங்கள் பல தறிக்கப்பட்டுள்ளன. வீடுகளிலுள்ள கதவுகள்,ஜன்னல்கள், கூரைச் சீற்றுகள் யாவும் கழற்றப்பட்டு லொறிகளில் ஏற்றப்பட்டுக்கொண்டு செல்லப்பட்டுகின்றன என்று இக்கிராமத்துக்குச் சென்று திரும்பிய பொது அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இக்கிராமத்தைச் சுற்றி கடற்படையினர் காவலரண்களை அமைத்துள்ளனர். (ஐ-175)

## மாணவர் மறுமலர்ச்சி வங்கிக் கணக்கு

யாழ்ப்பாணம்,ஜன.25

இவ்வருடம் தேசிய சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை முன்னிட்டு மக்கள் வங்கிக் கிளைகளில் 500 ரூபாவுக்கு மேற்படாத தொகையினை வைப்பிலிட்டு 'சிசு உதான' மாணவர் மறுமலர்ச்சிக் கணக்கினை ஆரம்பிப்பவர்களுக்கு தாம் வைப்புச் செய்யும் தொகைக்கு சமமான தொகையை மக்கள் வங்கி வழங்கவுள்ளது.

இந்த வருடம் தரம் ஒன்றில் அனுமதி பெற்ற மாணவர்கள் ஆரம்பிக்கும் கணக்கிற்கே மேற்படி இரட்டிப்புத் தொகை வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் இப்புதிய கணக்கை ஆரம்பித்து மக்கள் வங்கியின் அன்பளிப்பைப் பெற்றுக்கொள்ளுமாறு வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

இக்கணக்கில் சேமிப்பு வைப்புகள் அதிகரிக்கப்படும் போது மாணவர்களுக்கு பரிசில்களும் பயன்களும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-204)

## பறாளை ஆலயத்தில் திருட்டு முயற்சி

யாழ்ப்பாணம்,ஜன.25

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தினுள் ஞாயிறு இரவு புகுந்த திருடர்கள் மூல விக்கிரகத்தைப் புரட்டிப் பெயர்த்துள்ளனர். எனினும் பொருள்கள் எதனையும் திருடாமலேயே தப்பி ஓடிவிட்டனர்.

அயலில் உள்ள முருகன் ஆலயத்தில் இருந்தோர் குரல் எழுப்பி திருடரை விரட்டினர் என்று கூறப்படுகிறது.

மூலவிக்கிரகத்தின் கீழ் இருந்த இயந்திரத் தகடு அபகரிக்கப்படவில்லை. (ஐ-28)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம்.ஜன.25

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் இவ்வருடத்திற்கான ஆண்டு ஒன்று அனுமதி பெற்ற மாணவர்களின் கால்கோள் விழா நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக யாழ். மாநகராட்சி மன்ற சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் து.மகாதேவன் கலந்துகொண்டார். (ஐ)


### கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்தவரும் மாவட்டத் தலைவர் (கண்பார்வை) லயன் கா.சற்குணதேவன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி புஸ்பலீலா காசிலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.

(45975)(42-16-19)



### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுபாசினி ஹரிச்சந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

**யோபுப்பிள்ளை சாள்ஸ் செல்வராசா**
(இளைப்பாறிய அதிபர், புங்குடுதீவு)

அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

(45973)(42-16-19)



### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஞானாம்பிகை ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் அருளம்பலம்**

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/வண்ணை நாவலர் ம.வி.

அதிபர், ஆசிரியர்கள்.

(45974)(42-16-19)



### 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 18 - 12 - 1940



உதிர்வு 26 - 12 - 2005

**அமரர் வேலுப்பிள்ளை தில்லையம்பலம்**

கண்கண்ட தெய்வமே அப்பாவே!
பெற்றெடுத்த அப்பாவே ஆருயிரே!
பாசமிங்கு கூடியிருக்க
பாதியிலே போனதென்ன?
நன்மக்கள் நாங்கள் என்று
நல்லதெல்லாம் பார்க்கு முன்னே
காலனவன் அழைத்தானோ?
உற்றதுணையும் இங்கு இருக்க
மெய்மறந்து தூக்கம் என்ன?
அப்பாவின் நிழல்கள் எல்லாம்
கண்முன்னே ஆடுதப்பா!
இனி நித்தமும் விழி சொரிய
உங்களின் நினைவுகள் தான் எங்களுக்கு

*எங்கள் ஆருயிர் தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக. ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (25.01.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*20/33, வைரவர் கோவில்ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

மனைவி, பிள்ளைகள்.

(45966)(42-19-16)



### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

ஜனனம் 20 - 04 - 1948



மரணம் 26 - 12 - 2005

**அமரர் கடம்பவனநாயகி இரத்தினசிங்கம்**

*திதி - 25.01.2006*

*அமரர் கடம்பவனநாயகி இரத்தினசிங்கம் நோயுற்று இருந்தவேளை உதவிசெய்த அனைத்து வைத்தியர்களுக்கும் மற்றும் அவ்வேளையில் சிரமம் பாராது உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள். மேலும் அன்னார் 26.12.2005 திங்கட்கிழமை சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் அனுப்பியவர்களுக்கும் மற்றும் இறுதிக் கிரியை முதல் இன்று வரை சிரமம் பாராது உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.*

*29.01.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் A.U.S. மண்டபத்தில் இல.8, லோறன்ஸ் வீதி, பம்பலப்பிட்டியில் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

தகவல்: ஜனார்த்தனன்.
0776503245.

குடும்பத்தினர்.

(ச/47502)(42-19-16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற பவள விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பாடசாலை அதிபர் வி.மாணிக்கம், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், காரை எம்.பி.அருளானந்தம் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் 'கனகஜோதி' மலரின் முதற் பிரதியை அரச அதிபரிடம் இருந்து துணைவேந்தர் பெற்றுக்கொள்வதையும் நூலின் சிறப்புப் பிரதியின் முதற் பிரதியை அரச அதிபரிடம் இருந்து யாழ்.பல்கலைக் கழக நிதியாளர் கே.கனகரத்தினம் பெற்றுக்கொள்வதையும் பிரமுகர்கள் அரங்கில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். [படங்கள்: பகீரதன்]

# அமெரிக்கத் தூதரின் உரைக்கு 12 தமிழ் அமைப்புகள் கண்டனம்

நியூயோர்க்,ஜன.25

விடுதலைப் புலிகளை எச்சரிக்கும் வகையில் சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருந்த கருத்துகளுக்கு அமெரிக்கத் தமிழர் அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

12 அமெரிக்கத் தமிழ் அமைப்புகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்பில் கடந்த ஜனவரி 9ஆம் நாள் முதலீட்டாளர்களிடையே அமெரிக்கத் தூதர் ஆற்றிய உரை குறித்து நாம் கவலை கொள்கிறோம். சிறிலங்கா அரசுக்கு பக்கச்சார்பானதாக மட்டுமன்றி விடுதலைப் புலிகளுக்கான அமெரிக்காவின் அச்சுறுத்தலாகவும் அந்த உரை உள்ளது.

யுத்தம் ஏற்பட்டால் அதற்காக பாரிய விலை கொடுக்க நேரிடும் என்றும் வலுவான சிறிலங்கா இராணுவத்தை விடுதலைப் புலிகள் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தால் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார் என்பதை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவே ஒப்புக்கொண்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்டெட்டின் பேச்சு அமைதி முயற்சிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும். அது அமெரிக்காவின் நலனுக்கும் உகந்தது அல்ல. விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டும் வகையில் பேசப்பட்டுள்ளது.

இத்தகைய பேச்சின் மூலம் அமைதி முயற்சிகளில் அமெரிக்காவின் பங்கு குறித்து பல கேள்விகள் எழும்புகின்றன.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வருவதற்கு சில நாள்களுக்கு முன்னர் ஏன் அமெரிக்கத் தூதுவர் இத்தகைய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும்? அமெரிக்கத் தூதரே தனது பேச்சின் கடுமையைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அமெரிக்காவின் சார்பில் நிக்கலஸ் பேர்ன்ஸ் இலங்கை நிலைமைகளை அவதானிக்கச் செல்லும் போது அமெரிக்கத் தூதர் இத்தகைய கருத்துகளை ஏன் வெளியிட வேண்டும்? ஜனவரி 17ஆம் நாளன்று தனது உரைக்கு அமெரிக்கத் தூதுவர் விளக்கம் அளித்துள்ளார்.

அமைதி முயற்சிகளில் அமெரிக்காவின் கொள்கைகளை ஜெப்ரி லான்ஸ்டெட் பிரதிபலிக்கவில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

இலங்கை செல்லும் அமெரிக்கப் பிரதிநிதி நிக்கலஸ் பேர்ன்ஸ், அமைதி முயற்சிகள் தொடர்பான இலங்கையின் நிலையை தெளிவுபடுத்தி அமைதி முயற்சிகளுக்கு உதவ வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு மையம், அமெரிக்கத் தமிழர் பன்னாட்டு மையம், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை தமிழ் சங்கம் (கலிபோர்னியா), இலங்கைத் தமிழ் சங்கம் (புளோரிடா), இலங்கைத் தமிழ் சங்கம் (அமெரிக்கா), இலங்கைத் தமிழ் சங்கம் (வன்கூவர்) - போர்ட்லாண்ட், வாசிங்ரன், மத்திய மேற்கு தமிழ்ச் சங்கம் (இல்லினாய்ஸ்), தமிழ் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு(கலிபோர்னியா), உலகத் தமிழ் அமைப்பு (இல்லினாய்ஸ்), உலகத் தமிழ் பெண்கள் அமைப்பு (அமெரிக்கா) ஆகியவை அந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. (ஐ)

## சாயிசேவா நிலைய திறப்பு விழா

கோப்பாய், ஜன.25

உரும்பிராய் வடக்கு, திரு வீதியில் புதிதாக அமைக்கப்பெற்ற பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத் திறப்பு விழா நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விழாக்குழுத் தலைவி ஸ்ரீமதி மா.இராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.தியாகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடபிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுத் தலைவர் சி.வசந்தசேனனும் ஆன்மீக இணைப்பாளர் ஸ்ரீமதி ம.இராசரத்தினமும் கலந்து கொள்வர். (ஐ-12-72)

## சிரார்த்த தினம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி அடிகளாரின் 58ஆவது சிரார்த்த தினம் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் நினைவுச் சிலையடியில் முற்பகல் 10.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் வைபவம் நடைபெறும். (ஐ)

## புத்தளம், கற்பிட்டியில்

# வங்கிக் கொள்ளையர்களை சுட்டு மடக்கியது பொலீஸ்

## துப்பாக்கி வேட்டில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜன. 25

புத்தளம் மாவட்டம் கற்பிட்டி பாலக்குடாவிலுள்ள வயம்ப அபிவிருத்தி வங்கியில் கொள்ளையிட்டுத் தப்பிச்சென்றோரைப் பொலீஸார் விரட்டி பிடிக்கையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டு மோதலில் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஜா - எல வாசி ஒருவர் பலியானார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொள்ளைக்கோஷ்டியைச் சேர்ந்த மற்றைய இருவரும் பொலீஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கற்பிட்டியில் உள்ள அபிவிருத்தி வங்கி ஒன்றில் ஆயுதத்துடன் வந்த மூவர் வங்கி அலுவலர்களைப் பயமுறுத்தி அங்கிருந்த பணத்தையும், நகைகளையும் கொள்ளையடித்துத் தப்பிச்சென்றுள்ளனர்.

வங்கி அலுவலர்கள் உடனே இதுபற்றி கற்பிட்டிப் பொலீஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். கொள்ளைக் கோஷ்டியைப் பின்தொடர்ந்த பொலீஸார், கொழும்பு - புத்தளம் பிரதான வீதியில் பாலாவியில் வைத்து அக்கோஷ்டியை மறித்துள்ளனர்.

எனினும், கொள்ளையர்கள் பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் -

பதிலுக்குப் பொலீஸாரும் கொள்ளையர்கள் மீது சுட்டனர் என்றும் -

அதில் கொள்ளையர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளைக் கோஷ்டியைச்சேர்ந்த மற்றைய இருவரும் பொலீஸாரினால் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கொள்ளையிடப்பட்ட பணமும் நகையும் மீட்கப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## காமினி திஸாநாயக்கவுடன் —

# பலியான 13 பேரின் உடைகளை உறவினரிடம் ஒப்படைக்க உத்தரவு

கொழும்பு,ஜன.25

1994 ஒக்ரோபர் 24ஆம் திகதி கொழும்பு கிராண்ட்பாஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அப்போதைய ஐ.தே.கட்சிப் பிரமுகரும் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளருமான காமினி திஸாநாயக்க, எம்.பிக்களான ஜி.எம்.பிரேமச்சந்திர, வீரசிங்க மல்லிமாராச்சி, காமினி விஜேசேகர ஒஸி அபே குணசேகர ஆகியோர் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர்.

அச்சமயம் அவர்களின் உடைமையாக இருந்த பொருள்கள் மற்றும் ஆடைகள் போன்றவற்றை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி கொழும்பு மேலதிக நீதிவான் திருமதி எல்.லியனாராச்சி உத்தரவிட்டார்.

மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏதுநிலை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மேற்படி வழக்கின் தடயப் பொருள்களான இந்த உடைகள் மற்றும் உடைமைகளை என்ன செய்வது என்று கோரி பொலீஸார் நீதிமன்றத்திடம் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர். அந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்த பின்னரே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்து 11 ஆண்டுகள் கடந்த பின்னரே அதில் உயிரிழந்தோரின் உடைகளை உறவினர்களிடம் கையளிக்கும் உத்தரவு விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பாலஸ்தாபன பெருவிழா

தென்மராட்சி. ஜன. 25

அனுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் பாலஸ்தாபன பெருவிழா இன்று புதன்கிழமை காலை 7.05 மணி முதல் நடைபெறவுள்ளது.

விநாயகர் அனுஷ்ஞை, சுப்பிரமணியர் அனுஷ்ஞை, இரஷாபந்தனம் போன்ற கிரியைகள், விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று 8.45 மணிக்கு நாட்டில் சமாதானம் நிலவ வேண்டி சர்வமதப் பிரார்த்தனையும் நடைபெறும். (ஐ-204)

## தாங்கமுடியாத அளவில் கிழக்கில் குளிரான சுவாத்தியம்

மட்டக்களப்பு,ஜன.25

கிழக்கு மாகாணத்தில் என்றுமில்லாதவாறு கடும்குளிர் நிலவுகின்றது.இதனால் வயோதிபர்கள்,குழந்தைகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பிரதேசங்களில் காலை 6.30 மணி ஆகியும் இருள் சூழ்ந்த நிலையே காணப்படுகின்றது. 7.00 மணிக்குப் பின்னரே ஓரளவு வெளிச்சத்தைக் காணமுடிகின்றது.


காலையில் நேரகாலத்துடன் கடமைக்குச் செல்வதற்கு முடியாத நிலை இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் காலநிலை மாற்றமடைந்திருக்கின்றது என முதியோர்கள் கூறுகின்றனர்.

## கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்குக் கட்டடங்கள்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இரு கிளைக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கச்சாய் - பாலாவிக் கிளையும் கரம்பைக் குறிச்சிக் கிளையுமே 10 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இக் கிளைக் கடைகள் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. யாழ்.அரச அதிபரின் துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் இக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. (ஐ-117)



மட்டக்களப்பு ஊறணிப் பகுதியில் கிளைமோர் தாக்குதல் நடந்த இடத்தை படையினர் மற்றும் பொலீஸார் பார்வையிடுவதையும் உயிரிழந்த படையினரின் மரண விசாரணை நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனை

சுன்னாகத்தில் 8 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணி வான் பயிர் பிரயோசனங்களுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **0777 - 316634, 077 - 3506451.** (45930)

கிளிநொச்சி நகரத்தை அண்டிய பிரதேசத்தில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.ஜெயபாலன், கரடிப்போக்கு, கிளிநொச்சி **T.P.No. 021 228 5849, 0779063571.** (சி-47497)

## மணமகன் தேவை

யாழ்.இந்து 1964, புனர்பூசம் 2ஆம் பாதம் 5இல் செவ்வாய், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு மணமகன் தேவை. தொடர்பு: பூணாவளைத் தோட்டம், கரணவாய், கரவெட்டி. **T.P.No. 021 2263846.** (45930)

யாழ்.உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972இல் பிறந்த, 7இல் செவ்வாய் உள்ள, அரச உத்தியோகத்தில் இருக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: **T.P.No. 0773288792, 077 3288793.** (45937)

**B.Sc.** டபிள்மற்ஸ் ஸ்ரற்ஸ் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் 1971ஆம் ஆண்டு பிறந்த, 8 இல் செவ்வாய் உள்ள கணவனை இழந்த மணப்பெண்ணிற்கு மணமகன் தேவை. தொடர்பிற்கு விளம்பர இல. 2790, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (45959)

## வாடகைக்கு

கோண்டாவில் சந்திக்கும் இறைச்சிக் கடைக்கு பக்கத்தில் பலாலி வீதியில் அமைந்துள்ள 5 அறைகள் உடன் திருத்தி அமைத்த வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: திருமதி கிருஷ்ணமூர்த்தி. (45536)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழி கொள்வனவு செய்யப்படும் அத்துடன் கோழி எருவும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். 158/4, தாசன் பாம், கோயில் வீதி, யாழ்ப்பாணம் (45958)

## நாய்கள் விற்பனை

கொக்கர் ஸ்பேனியல் (ஆண்), அல்ஷேசன் (பெண்), டொமமன் பின்சர் (ஆண்) நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. ஜெயராஜசிங்கம் (பவான்) உடுவில் மேற்கு, சுன்னாகம். (45934)

## தவறிவிட்டது

ஆனந்தன் ரவிச்சந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (802621318V) விசேட அடையாள அட்டை (0902018622) என்பன செம்மணி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 46, கொண்டலடிலேன், நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(45927)

## கடைகள் வாடகைக்குண்டு

360, பிரதான வீதியில் அமைந்துள்ள புனித வளன் கத்தோலிக்க அச்சக கட்டடத் தொகுதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. தேவையானவர்கள் உடனடியாக நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

*முகாமையாளர்*

**புனித வளன் கத்தோலிக்க அச்சகம்**

தொலைபேசி: 021 - 222 2378

0777 - 266080

(சி-47487) (2119.16)

# உலக வங்கி நிதியில் வீடமைப்பதற்கு கிராமங்கள் தெரிவு

வலி.மேற்கு, ஜன. 25

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒன்பது கிராமங்கள் உலக வங்கியின் நிதி உதவியுடன் 'நியாப் '' II ஆம் கட்ட வீடமைப்புத் திட்டத்துக்கு அமைய தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவிலுள்ள எட்டு கிராம அலுவலர்பிரிவுகளில் இருந்து ஒன்பது கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஒன்பது கிராமங்களிலும் வசிக்கின்ற குடும்பங்கள் மிகவும் பின்தங்கிய வறிய, வருமானம் குறைந்த குடும்பங்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மூளாய் கிராம அலுவலர் பிரிவிலிருந்து வேரம், பிள்ளையார் கோயிலடி ஆகிய இரண்டு கிராமங்களும் சுழிபுரம் மேற்கு கிராம அலவலர் பிரிவில் பெரிய புலோ கிராமமும், பனிப்புலம் கிராம அலுவலர் பிரிவில் குஞ்சன்கலட்டி கிராமமும், வட்டு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் செம்பாட்டான் தோட்டம் கிராமமும், சுழிபுரம் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பாணாவெட்டிக் கிராமமும், சுழிபுரம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் குடாக்கனை கிராமமும் பண்ணாகம் கிராமம் அலுவலர் பிரிவில் காலையடிக்கிராமமும், வட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் முதலிகோயிலடி கிராமமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ஐ-175)

# நல்லூர்ப் பிரதேசத்தில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 25

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் நாளை தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கொக்குவில் வை.எம்.எச்.ஏ.கோணாவளை வீதி, பொற்பதிபிள்ளையார் கோயிலடி ஆகிய இடங்களிலும் -

பிற்பகல் ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை காளிகோயிலடி சனசமூக நிலையம், நேதாஜி சனசமூக நிலையம், மனோன்மணி சனசமூக நிலையம், கனகதுர்க்கா கோயிலடி ஆகிய இடங்களிலும் தடுப்பூசி ஏற்படும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை வைரவர் கோயிலடி, பிரம்படிலேன் சனசமூக நிலையம், இந்திரா சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் -

பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணி வரை வளர்மதி சனசமூக நிலையம், கொக்குவில் சனசமூக நிலையம், நந்தாவில் லேன், முதலியார் கோயிலடி ஆகிய இடங்களிலும் தடுப்பூசி ஏற்றப்படும். (ஐ-202)

# பாடசாலைகளுக்கான கூட்டம்

தென்மராட்சி. ஜன. 25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 4 வகுப்புகளில் அமுல் செய்யப்படும் 'பொப்லெப்' செயற்றிட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கான கூட்டம் எதிர் வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 12.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஐ-117)

# திருமண வாழ்த்து

இன்று (25.01.2006) புதன்கிழமை பம்பலப்பிட்டி கொமினியுற்றி சென்ரர் திருமண மண்டபத்தில் இணையும்

**சிவகுமார் - சிவசக்தி**

தம்பதிகளை இறைவன் துணையுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**நீர்வையூர் ரஞ்சன்** *(அண்ணா-லண்டன்)*

**பிரபாகரன்** *(அத்தான்-லண்டன்)*

**சிவப்பிரியா** *(அக்கா- லண்டன்)*

T.P.:0112605306

(45851)(51-16-17)

# COMPUTER EXPRESS

**Institute of Information Technology**

இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.

021-222 8250,0777 222422

முதன்முறையாக கம்பனிக்கணக்குகளுடன் தமிழ்மொழி விளக்கத்துடன்

ஒருவாரகால முழுநேர

***Diploma in Computerized Accounting***

**Accpac + Quick Books Pro + MYOB**

ஆகிய முன்னணி கணக்கியல் மென்பொருட்களினூடாக கற்பிக்கப்படுகின்றது.

***Course Contents***

- *Fundamentals of IT*
- *Manual Accounting*
- *Financial Accounting*
- *Cost Accounting*
- *Taxation (Including VAT)*
- *Stock Control*
- *Bank Reconciliation*
- *Budgeting*
- *Fore Casting*
- *Business Planing*

கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போரும், கற்றுமுடித்தவர்களும், வெளிநாட்டில் கணக்கியல் துறையில் வேலை எதிர்பார்த்திருப்போரும், வேலைசெய்துகொண்டிப்போரும் இக் கற்கைநெறியைப் பயிலலாம்.

**Course fee :- 3,500/=**

நன்மைகள்:-

- பாடநெறியின் இறுதியில் கணனிக்கணக்கியல் தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- *28/01/2006 :- 08.30*

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

# அரசாங்க அறிவித்தல்

**பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை சுகாதார சேவைகள் - யாழ்ப்பாணம்**

**2006ஆம் ஆண்டிற்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களையும் திருத்துநர்களையும் பதிவுசெய்தல்**

**மேற்படி விடயமாக இதே பத்திரிகையில் 31.12.2005ஆம் திகதிய விளம்பரத்திற்கு கவனம் செலுத்துவதுடன் வழங்குநர், திருத்துநர் பதிவுக்கான இறுதித் திகதியை 31.01.2006 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.**

*வைத்திய கலாநிதி* **ஆ.கேதீஸ்வரன்,**

பிரதி மாகாணப் பணிப்பாளர்

சுகாதார சேவைகள்,

யாழ்ப்பாணம்.

(சு/47495)(21.42.16.19)

# 'கேன்' யாழ்ப்பாணம் புற்றுநோயாளர் காப்பக

## திறப்பு நிகழ்ச்சி

யாழ்.மருதனார்மடம், உடுவில், சபாபதிப்பிள்ளை வீதியில் **'கேன்'** U.K. *நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட*

**யாழ்ப்பாணம் - புற்றுநோயாளர் காப்பகம்**

எதிர்வரும் 28ஆம் திகதி (28.01.2006) சனிக்கிழமை 9.30 மணியளவில் யாழ். அரச அதிபர் K.கணேஷ் அவர்களினால் திறந்து வைக்கப்படும் என்பதை பொதுமக்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

(45952)(21.16.19)

- காப்பக நிர்வாகத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராம அலுவலர்களான *திருமதி ப. இராஜேஸ்வரி* அவர்களின் தந்தையும் *திரு. க.பரமேஸ்வரன்* அவர்களின் மாமனாருமாகிய

**சுப்பிரமணியம் வேலாயுதம்**

அவர்கள் 05.01.2006 வியாழக்கிழமை கொழும்பில் காலமான செய்தியைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்,

**பிரதேச செயலகம், வேலணை.**

(45951)
(21.42.16.19)

# மரண அறிவித்தல்

## யோசப்பிள்ளை சால்ஸ் செல்வராசா



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 181/1, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப்பிள்ளை சால்ஸ் செல்வராசா (சாளி மாஸ்டர், இளைப்பாறிய அதிபர்) நேற்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப்பிள்ளை - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், செல்வவதனா (பொதுமுகாமையாளர் புங்-நயி ப.நோ. கூ. சங்கம்), கமலராசன் (கனடா), ஜெபரஞ்சினி (கனடா), சுபாசினி (ஆசிரியை, யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோதிஜீ (கனடா), ஸ்ரீரதிதேவி (கனடா), ஹரிச்சந்திரா (நிலஅளவையாளர், பிறைட் கொன்ஸ்ரக்சன், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா, சவுந்தரராசா, இரத்தினராசா, நேசமலர் மற்றும் அரியமலர் (கனடா), முத்துராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகநாயகம், இந்திரா மற்றும் சகுந்தலா (வேம்பஸ்தான்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (25.01.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புங்குடுதீவு தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*181/1, 2ஆம் குறுக்குத்தெரு,*
**யாழ்ப்பாணம்.** (45954)(21.16.19)

தகவல்:
**குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



எமது பரிபாலனசபையின் உபதலைவர்
ஜெ.பாலகெங்காதரனின் தாய்
**திருமதி ஐயாத்துரை கங்காபாய்**
*(பூமணி)*
22.01.2006 அன்று
சிவபதமடைந்தமையால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல யோகாம்பிகை சமேத யோகபுரநாதரைப்
பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*மல்லாவி,*
*யோகபுரம்.* (45953)
(21.42.16.19)

யோகபுரம் சிவாலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் எலும்புக் கூடுகள் மீட்பு

களுவாஞ்சிக்குடி நகரில் கட்டடம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக் கப்பட்டிருந்த இடம் நேற்றுத் தோண்டப்பட்ட போது எலும்புக்கூடுகள் சில கிடைக்கப்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய றுகுணு பல்கலைக்கழகத்தின் சட்ட வைத்திய ஆலோசகர் பேராசிரியர் பெரேரா முன்னிலையில் இந்த இடம் ஆராயப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக் குடி உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் மனிதர்களுடை யவையா அல்லது மிருகங்களினதா என்பதை உறுதிசெய்யும் பொருட்டு பரிசோதனை நடத்தப்பட இருப்பதாக த் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் டிசெம்பர் 12 ஆம் திகதி இங்கு எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. நேற்று இரண்டாவது தடவையாக குறிப்பிட்ட இடம் தோண்டப்பட்டு மேலும் சில எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (ஒ-14)

# முதலாம் வகுப்பு அனுமதி: மேன்முறையீடு பரிசீலனை

பாடசாலைகளில் முதலாம் வகுப்பு அனுமதியின் போது நிரா கரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் ஆவணங்கள் மேன்முறையீட்டு ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பிள்ளைகளுக்கு உரிய பாடசாலைகளைத் தெரிவு செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக கல்வி அமைச் சின் ஊடக செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முடிவடைய முன்னர் இந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் -

இதேவேளை நாடு முழுவதிலும் உள்ள சகல மத்திய வித்தியால யங்களையும் 'கன்னங்கர' செயற்திட்டத்திற்கு அமைய அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் மேலும் கூறினார். (ஒ-14)


## தரம் 4 மாணவர்களின்..

அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் நடத்தப் படும் ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் விசேட மாதிரிப் பரீட்சைகள் - 2006 முதலாவது பரீட்சை 29.01.2006 ஞாயிறு காலை 9-10.30 மணி வரை. வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பரீட்சை எழுதவிரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் பிற்பகல் 4 - 6 மணிவரை மேற்கொள்ளவும்.

இடம் - அன்பொளி கல்வியகம்
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0773068999 (சி 47505) (18-54-12) இயக்குநர்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
பாலகுமார் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி கனகம்மா நடராசா**

அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு
அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

நெல்லியடி
மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி. பாடசாலைச் சமூகம். (சி 47507)(18-54-12)


## DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc.

Course Fee :- 2000/= Duration 4 months

ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்.

பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்

ஆரம்பம் :- 28,30.01.2006

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170
0777846811


## முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம் 22 - 11 - 1974



மறைவு 25 - 01 - 2005

**சே. ரஜனிகாந் (சங்கமன்/சுரேன்)**

நிலையில்லா பூவுலகில்
நிலைத்து விட்ட உன் நினைவால்
நினைவிழக்க முடியாது - நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்
என்றும் உன் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடைய வேண்டும் உன் நண்பர்கள்.

(சி 47505) (18-54-12) யாழ். ஜெனா தையலகம்.

# சுத்திகரிப்புப் பணி தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். மாநகரசபைப் பகுதியில் கழிவு களை அகற்றும் பணிகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வீ.கே. சிவஞா னம் தெரிவித்தார்.

அண்மைய வாரங்களில் நிலவிய அசா தாரண சூழ்நிலை காரணமாக கழிவுகளை அகற்றுவதில் மந்த நிலை ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து மேலதிக ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தற்போது கழிவகற்றும் பணி கள் வேகமாக மேற்கொள்ளப்படுகின்றன என்று மாநகரசபை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

தற்போது அதிக எண்ணிக்கையான சுத் திகரிப்பு ஊழியர்களைப் பயன்படுத்தி கூடு தலான வேலை நேரங்களில் சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக் கப்பட்டது. (ஐ-12)


## A/L 2007 PHYSICS

Mr. சிவகுமார் B.Sc., Dip in Ed.
* வெப்பவியல் (பாடஅலகு)
* பொறியியல் (மீட்டல்)
இரு அலகுகளும் நடைபெறுகின்றன.

இணுவில்
பொருளியற் கல்லூரி
கே.கே.எஸ் றோட்,
இணுவில். (45981) (18-54-12)

## நாதன்ஸ் யாழ்ப்பாணம்

பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்: 9.00, 12.30, 3.30



## மனோகரா யாழ்ப்பாணம்

அதிரடி பொங்கல் வெளியீடு



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
(Dts நவீன ஒலியமைப்புடன்)
ஆதி
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி: பி.நே. 10.30, 1.30, 4.30, 7.30

## ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.15 மட்டும்

## நாகம்ஸ் சுன்னாகம்



சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
தினசரி: பகல்நேரம் 11.00, 3.00


# மூதூரில் ஒருவர் கொலை

மூதூர், ஜன.25

மூதூரில் தேவா லய வீதியில் கூட்டு றவுச் சங்கத்துக்கு முன்பாக கூட்டுற வுச் சங்க ஊழியரான இராமலிங்கம் சுந்தர லிங்கம் (வயது -54) என்பவர் நேற்று அதிகாலை 6.30 மணியளவில் இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளார்.

தனது மோட் டார் சைக்கிளில் சென்று கொண்டி ருந்த போது இவர் மீது இனம் தெரி யாத நபர்கள் துப்பா க்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-6)

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் வைத்தியநாதர்

(ஓய்வுபெற்ற நிதி உதவியாளர் பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு)



கொழும்புத்துறை, சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும் செட்டி குறிச்சி, பண்டத் தரிப்பை வசிப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் வைத்தியநாதர் அவர்கள் நேற்று(24.01.2006)செவ்வாய் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அருணாசலத்தின் மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையாவின் மருமகனும் செல்வரத்தினம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவராஜா, தவராஜா (ஆசிரியர், இராமநாதன் மகளிர் கல்லூரி கொழும்பு), ஜெயராஜா (யாழ்.தினக்குரல்), திருமதி சாந்திஜெயசீலன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி கௌசி தவராஜா(கொழும்பு), திருமதி சிவசக்தி ஜெயராஜா (ஆசிரியர் யாழ்.ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி- புத்தூர்), ஜெயசீலன் (கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை (அச்சுவேலி), அ.சண்முகசாமி (ஓய்வுபெற்ற மத்தியவங்கி உத்தியோகத்தர்), யோகநாதன் (கிச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2006) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பூம்பொழில்'
வராம்பற்றை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (45980) (18-45-12)

தகவல்:
வை.ஜெயராஜா (மகன்).

## திருமதி சரோஜினிதேவி திருநாவுக்கரசு

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி திருநாவுக்கரசு அவர்கள் நேற்று(24.01.2006)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பகவதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - ராசமணி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, மதியூகீ, ஜெயராம் மற்றும் குணலிங்கம்,திவ்வியம், நேசமணி சிவானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.01.2006)புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

458, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (45983) (18-45-12)

தகவல்:
நா.குணலிங்கம்,
நா.திவ்வியம்.

## இலட்சுமிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை

புற்றளை, புலோலியைச் சேர்ந்த இட்சுமிப்பிள்ளை வீரகத்திப் பிள்ளை நேற்று(24.01.2006)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வீரகத்திப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற இராஜேஸ்வரி,காலஞ்சென்றதங்கராசா, பரமேஸ்வரி, கணேசலிங்கம்(பிரதேச செயலகம் -தெல்லிப்பழை), யோகேஸ் வரி, புவனேஸ்வரி (லண்டன்), பாலகிருஸ்ணன் (வைத்தியர்- மகர கம வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் சிவபாலசுப் பிரமணியம், யோகவதி (பிரதேசசெயலகம்- பருத்தித்துறை), சிவபாதம், கணேசலிங்கம் (லண்டன்), பொன்மலர் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.01.2006)புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்துக்கு தகனத்திற்காக எடுத் துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புற்றளை, புலோலி. (சி-47506) (18-45-12)

தகவல்:
த.பாலகிட்டிணபிள்ளை (சகோதரன்).

# மரண அறிவித்தல்

## செபஸ்ரியாம்பிள்ளை (நேசராசா) அருளாசியம்மா



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம் பிள்ளை (நேசராசா) அருளாசியம்மா அவர் கள் நேற்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவல்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளையின் (நேசராசா) அவர்க ளின் அன்பு மனைவியும் புஸ்பராணி, இந்து ராணி, அருள்ராசா, நேசரட்ணம் (பிரான்ஸ்), ஜீவராணி (பிரான்ஸ்), சந்தர் (ஜேர்மனி) ஆகி யோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2006) புதன்கிழமை பிற்பகல் 4 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

78/12, பீச் றோட்,
நாவாந்துறை. (45978) (18-45-12)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது மக்களுக்காகக் குரல் கொடுத்த பேனாப் போராளியின் வாய் மூடப்பட்டது

## வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம்,ஜன.25

தனது மக்களுக்காகக் குரல் கொடுத்த மற்றொரு பேனாப் போராளியின் வாய் மூடப்பட்டுள்ளது கவலையளிக்கிறது.

இவ்வாறு வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

'சுடர்ஒளி-உதயன்' பத்திரிகைகளின் திருகோணமலைப் பிராந்தியச் செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் கொல்லப்பட்டதைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

துப்பாக்கி முனைகளின் முன் உண்மைகள் உறங்கிப்போகுமென நம்பும் ஆயுததாரிகளால் மீண்டும் திருமலையில் தமிழ் ஊடகவியலாளர் ஒருவரது உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டுள்ளது. ராஜன் என நட்புடன் அழைக்கப்படும் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் கோழைகளால் கோரமாக சுடப்பட்டமையினை எமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

நிமலராஜன், நடேசன், சிவராம் போன்று நம்மின மக்களுக்காக குரல் கொடுத்த மற்றுமொரு பேனாப் போராளியின் வாய் மூடப்பட்டது கவலையும் அதிர்ச்சியுமளிக்கின்றது.

எமது சக ஊடகவியல் நண்பனின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கும் நாம் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்-என்றுள்ளது.

## திருமலை 'சுடர்ஒளி' செய்தியாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார். இதனையடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அப்போது காவல் கடமையில் பொலீஸாரும், இராணுவத்தினரும் இருந்தபோதும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் பின்னர் கொலையாளிகள் இலகுவாகத் தப்பிச்சென்றனர்.

கொல்லப்பட்ட செய்தியாளர் எஸ்.எஸ்.ஆர். இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். மனைவி மகேஸ்வரி (வயது-30), பிள்ளைகளான திதுஷா (வயது-4), யதுர்ஷன் (வயது-2) ஆகியோருடன் உவர்மலையில் வசித்துவந்த இவர் கல்முனை அம்மன்கோவில் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளராகத் திகழ்ந்த இவர் தனித்துவம்மிக்க செய்திகளை திருகோணமலையிலிருந்து வழங்கி அபாரமான சேவையாற்றி வந்தார். அண்மையில் திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐந்துபேர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான உண்மை நிலைவரங்களை செய்தியாகவும், செய்திப் படங்களாகவும் வெளிக்கொணர்ந்து அம்பலப்படுத்தியவர் செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜன்.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் திருகோணமலையில் வசித்துவரும் சுகிர்தராஜன், மாவட்டத்தின் உண்மை நிலையை உணர்த்தி செய்திகளை எழுதியவர்.

அதேபோல், திருமலையில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பிலும் அவர் தொடர் கட்டுரைகளை எழுதிவந்தார். திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐந்துபேர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பிலான செய்திகளும்,படங்களும் பாதுகாப்புத் தரப்புக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்று துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றதையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் அந்த இடத்துக்கு விரைந்து விசாரணைகளை நடத்தினர். இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை திருகோணமலைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-3)

## ஜனாதிபதியின் சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு வழங்கிய தகவலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைதிப் பேச்சுக்கு முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இது விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே தீர்க்கப்பட வேண்டிய விடயம் என 'உதயன் - சுடர்ஒளி', பத்திரிகைகளுக் குக் கொடுத்துள்ள பேட்டி கடந்த திங்கள் அப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜனாதிபதியின் 'மஹிந்த சிந்தனை'யில் அமைதிப் பேச்சுக்கு முஸ்லிம்கள் தனித்தரப்பாகவே கலந்து கொள்ளவேண்டும் என உறுதியளித்தவர் இன்று தனித்தரப்பை மறுக்கிறார்.

எவை எப்படியிருப்பினும் பேச்சுகளின் போது முஸ்லிம்கள் தனித்தரப்பாகவே கலந்து கொள்வார்கள். இதனை விடுதலைப் புலிகளும் அரசும் புரிந்துகொள்ளவேண்டும்.

அமைதிப் பேச்சுக்கான நடவடிக்கைகள் முன்னெடுத்துக் கொண்டிருக்கும் இவ்வேளை அதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும், மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் நாம் அவரிடம் கேட்டுக் கொள்கிறோம். இதேவேளை, முஸ்லிம் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் அரசு அதிக கவனம் காட்டவேண்டும்.

சமாதானப் பேச்சுகள் கூடிய விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதன்போது முஸ்லிம்கள் தனித்தரப்பாகவே கலந்து கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த முயற்சிக்கு எமது பூரண ஆதரவும் ஒத்துழைப்பையும் அரசுக்குக் கிடைக்கும் - எனத் தெரிவித்தார். (க)

## முல்லைக் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூசைநாதன் (வயது-42) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் முல்லை மாவட்ட சமாசத்தின் உதவியு டன் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இத்தேடுதலின் போது காணாமல் போனவர்கள் தொழிலில் ஈடுபடுத்திய வலைகள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக முல்லை மாவட்ட சமாசத்தினால் மாவட்ட அரச அதிபர், கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (ஒ-14)


## மரண அறிவித்தல்

### தியாகராஜா திருமகள்

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா திருமகள் நேற்று (24.01.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி, குமாரசாமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற முருகேசு வேலாயுதபிள்ளையின் (ஆசிரியர்) அன்புச் சகோதரியும், சுவர்ணரூபியின் அன்பு மாமியாரும் ரஜீவி, தர்சன், ராகவன், சுஜந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தி. குமாரசாமி (மகன்).

(சி-47508)


## விளக்குவைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படும் ''அடக்கு முறை'' என்ற பெயரில் கொடும்பாவி ஒன்றும் எரிக்கப்பட்டது.

பேரணியின் முடிவில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும், ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதியிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது. (க-355)

## ஜனாதிபதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

எரிக்சொல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிராட்ஸ்கர், நிறைவேற்று அதிகாரி ஓட் நௌஸ்ட்டால், சேன்டர் புரோட்வெட் மற்றும் டொம் நெப்சேக், நோர்வேத்தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக்கலந்துரையாடலை யடுத்து ஜனாதிபதியும், எரிக்சொல்ஹெய்மும் தற்போதைய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். (க-3)

## வரணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரச்சாவடைந்தவர். அண்மையில் இவரது குடும்பத்தினர் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தது. தனது கல்விச் செயற்பாட்டுக்காக வரணியில் தங்கியிருந்த நிலையில் நேற்று வைகுந்தன் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சடலம் பிரேதபரிசோதனை மற்றும் மரண விசாரணை என்பவற்றிற்காக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-6-15-78)

## பூதவுடல் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்னாரின் இல்லத்தில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் திருகோணமலை தமிழர்களிடையே பெரும் அச்சஉணர்வை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## கொழும்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிடுமாறு பொலீஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இக்கைக்குண்டு வெடிப்புகள் தொடர்பான உயிரிழப்புகளோ, பாதிப்பு சேதங்களோ வெளியிடப்படவில்லை. (க-14)

## அம்பாறைப் பிரதேசத்தில் இனவாத சுவரொட்டி

சம்மாந்துறை, ஜன. 25

அம்பாறை நகரமெங்கினும் இனவாதச் சிந்தனையைத் தூண்டும் வகையிலான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள் ளன.

திகாடுமல்ல சிங்கள குரல் எனும் அமைப்பிலான பெயருடன் ஒட்டப்பட்டுள்ள இச் சுவரொட்டிகளில், "கட்சி, நிறம் என்பன எப்படி இருந்தாலும் சிங்களவருக்கே வாக்களியுங்கள்" என்ற சுலோகம் பொறிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை சமாதானம் பற்றி பல்வேறு மட்டங்களிலும் சிந்திக்கப்பட்டுவரும் இவ்வேளையில் இவ்வாறான இனவாதக் கோஷங்கள் முன்வைக்கப்படுவதையிட்டு பலரும் பலவாறு சிந்திக்கின்றனர்.

## கஞ்சா கடத்திய பொலீஸ் அதிகாரி கைது!

ஏறாவூர்,ஜன.25

கஞ்சா கடத்திய பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர்இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

திங்கட்கிழமை மாலை ஏறாவூர் பொலீஸ் பிவிற்குட்பட்ட மாவடிப் பிரதேசத்தில் இந்த வேட்டை நடைபெற்றுள்ளது.

காத்தான்குடி பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 19 கிலோ 600 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி பொலீஸ் உத்தியோகத்தரும் அவரது உதவியாளரும் கஞ்சாவை உரப்பையினுள் கட்டிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்றனராம். வீதிப்பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளை மறித்து சோதனையிட்டபோதே கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த உதவியாளர் இராணுவத்தினரின் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.கைது செய்யப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தரையும், கஞ்சா வினை யும் இராணுவத்தினர் ஏறாவூர் பொலீஸில் ஒப்படைத்துள்ளனர். (க)

## பிரபா - சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடேல் பாலசிங்கம் ஆகியோர் பேச்சில் கலந்து கொள்வர்.

பேச்சு முடிவடைந்த பின்னர் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவிருக்கின்றார். (க-3)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டிருக்கிறது. இவர் மீது விழுந்துள்ள துப்பாக்கிச் சூடு, உண்மைக்காக போராடும் தமிழ்ப் பத்திரிகையாளர் மீது விழுந்த சூடு மட்டுமல்ல, ஆயுதங்கள் இன்றி உண்மைக்காகப் போராடும் இதர சிங்களப் பத்திரிகையாளர் மீதும் விழுந்த துப்பாக்கிச் சூடே.'' - என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (க)


LOGIC
2008 A/L
R.S.சந்திரன்
Sat. Sun. 8.00 a.m
சீன்-திருநெல்வேலி.

வெளிவந்து விட்டது
A-Level PHYSICS
சடமும் கதிர்ப்பும் (வினா விடை)
கரும் பொருள் கதிர்ப்பு
ஒளியின் விளைவு
X - கதிர்
M. Karunanithy
கிடைக்கும் இடங்கள்
New Science Hall
பூபாலசிங்கம் புத்தக சாலை
Niru Tuition Centre
ஸ்ரீ லங்கா புத்தக சாலை
All Ceylon Disttributors



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-mail: reservations@expoavi.com, jaffna@expoavi.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.